



# தமிழன்

THAMILAN


தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 170 குரோதி வருடம், மாசி மாதம் 02ஆம் திகதி வெள்ளிக்கிழமை (14.02.2025) ஹிஜ்ரி 1446, ஷஃபான் - 15, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.40


## வரவு - செலவுத்திட்ட பூர்வாங்க பேச்சு நிறைவு

» 02 பக்கம்


Adani Renewables

February 12, 2025

Mr. Arjuna Herath
Chairman
Board of Investment
Colombo, Sri Lanka

Dear Sir,

Adani Green's proposed Renewable Wind Farms & Transmission Lines in Sri Lanka

Please accept our greetings from India.

As you are aware, Adani Green has been under protracted discussions with CEB and various Government departments since past more than two years, in respect of establishing 484 MW Renewable Energy Wind Farms at Mannar and Pooneryn, Sri Lanka, along with its associated Transmission system, as also additional 220 KV and 400 KV Transmission network expansion to carry electrons to consumptive centers in the southern part of Sri Lanka.

These projects are envisaged to collectively see investments of about USD 1 billion in Sri Lanka, based on build own operate concept. Furthermore, our Corporate Social Responsibility (CSR) activities too would have accentuated in the contiguous geographies covering healthcare, education, infrastructure development, skill development, etc., benefiting local communities for better quality of life imperatives.

In pursuit of said proposal, Adani Green teams had several rounds of discussions with state appointed committees and after more than 14 rounds of discussions, approval was accorded on Tariff, fixed for 20 years, for the Power Purchase Agreement. Adani Green also worked on all clearances and licenses. With the exception of Mannar Environmental approval & an associated Supreme Court case, we have procured almost all clearances. Similarly, we have worked on lands for the project, as well as associated transmission system. Till date, the company has spent about USD 5 Mn on the predevelopment activities.

Page 1 of 2

# மின்திட்டத்திலிருந்து விலகியது அதானி!





## கொழும்பு மீது புதுடில்லி அதிருப்தி

» 02 பக்கம்

### உள்ளூராட்சித் தேர்தல்

## நீதிமன்றத் தீர்ப்பு இன்று சபைக்கு

உள்ளூராட்சித் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்மானம் இன்று (14) சபாநாயகரால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் திங்கட் கிழமை 17ஆம் திகதி இது தொடர்பான விவாதம் இடம் பெறவுள்ளது.

இந்நிலையில், இன்று வெள்ளிக்கிழமை (14) விசேட பாராளுமன்ற அமர்வொன்று இடம் பெறவுள்ளதுடன், சட்டமூலத்தை ஆராயும் நோக்கில் சம்பந்தப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும் இன்றையதினமே கூடவுள்ளது.

இந்தச் சட்டமூலத்துக்கு பாராளுமன்றத்தில் அனுமதியளிக்கப்படுமாக இருந்தால் அனுமதியளிக்கப்பட்ட மறுதினமே வேட்புமனுக்களை மீளழைப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைத்துவிடும்.

» 02 பக்கம்

## வருடாந்தம் 1,200 சிறுவர்களுக்கு புற்றுநோய் பாதிப்பு

நாட்டில் வருடாந்தம் 1,200 சிறுவர்கள் புற்றுநோயாளர்களாக அடையாளம் காணப்படுவதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது. அதிக எண்ணிக்கையிலான சிறுவர்கள் மூளை, எலும்பு மற்றும் டெஸ்டிகுலர் தொடர்புடைய புற்றுநோய்களால் பாதிக்கப்படுவதாக தேசிய புற்றுநோய் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் சமூக வைத்திய விசேட நிபுணர் சுராஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

» 02 பக்கம்

## லசந்த படுகொலை வழக்கு; சந்தேகநபர்களை விடுவிக்கும் உத்தரவு இடைநிறுத்தம்



'சண்டே லீடர்' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரை விடுவிப்பதற்கு சட்ட மா அதிபரால் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த உத்தரவை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்வதாக சட்ட மா அதிபர் பாரிந்த ரணசிங்கவால் கல்கிஸை நீதவான் நீதிமன்றத்துக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கில் சாட்சிகளை மாயமாக்கியமை மற்றும் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் மூவரை அந்த வழக்கிலிருந்து விடுவிக்க முடியுமெனத் தெரிவித்து, கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு சட்ட மா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

» 02 பக்கம்

### தமிழரசுக் கட்சியின் வழக்கு

## 4 மாதங்களுக்கு ஒத்திவைப்பு

## விசாரணைகளில் தொடர் காலதாமதம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு, பிரதிவாதியொருவரை மாற்றுவது குறித்து விசாரணை செய்வதற்காக எதிர்வரும் ஜூன் மாதம் 04ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அந்தத் திகதியில் பிரதிவாதியொருவரை மாற்றுவது குறித்துத் தீர்மானிக்கப்படுமென்பதுடன், அதன் பின்னரே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி பயஸ் ரஸாக் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

» 02 பக்கம்






» 03 பக்கம்



## மார்ச் 26க்கு பின்னர் உள்ளூராட்சி தேர்தலை நடத்த யோசனை

### கட்டுப்பணத்தை மீளத் தருமாறும் கட்சிகள் கோரிக்கை

அரசாங்கத்தால் முன்வைக்கப்படவுள்ள 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்ட விவாதம் எதிர்வரும் திங்கட்கிழமை (17) ஆரம்பமாகவுள்ளது. இந் நிலையில், மார்ச் மாதம் 26ஆம் திகதியின் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு எதிர்த்தரப்பைச் சேர்ந்த 12 அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளன.

» 02 பக்கம்




***சீனாவின் ஊடுருவல் இலங்கைக்குள் அதிகரித்துள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தும் இராஜதந்திர செயற்பாடுகளில் இறங்கியுள்ளனவாம் 03 நாடுகள்.***

***அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் ஆகிய 03 நாடுகள் சீனா விடயத்தில் இலங்கை மீது கடுப்பாக இருப்பதால் அந்த நாடுகளின் இலங்கைக்கான முதலீடுகளும் இனி இங்கு வரும் வாய்ப்பில்லையாம்...***

***ஏற்கனவே அதானி நிறுவனம் இலங்கையை வெறுத்துள்ளதால் இந்தியாவை பகைத்துவிட்டோமா என்று ஆடிப்போயுள்ளதாம் அரச மேலிடம்.***

## சட்ட மா அதிபர் திணைக்களத்தை அரசியல்மயமாக்க முயற்சி



### அரசாங்கத்துக்கு எதிராக நாமல் சாடல்

» 02 பக்கம்




# டுபாய் அரச தலைவர்களை சந்தித்தார் ஜனாதிபதி



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 2025 உலக அரச உச்சி மாநாட்டில் பங்கேற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் ஐக்கிய அரபு இராச்சிய உப ஜனாதிபதி, பிரதமர் மற்றும் டுபாய் ஆட்சியாளரான ஷேக் முஹம்மது பின் ரஷீத் அல் மக்தூமுக்கும் இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் (12) நடைபெற்றது.

இந்த சந்திப்பில் டுபாயின் பட்டத்து இளவரசரும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ஷேக் ஹம்தான் பின் முஹம்மது பின் ரஷீத் அல் மக்தூம், டுபாயின் முதல் பிரதி ஆட்சியாளரும் ஐக்கிய அரபு இராச்சிய பிரதி பிரதமரும் நிதி அமைச்சருமான ஷேக் மக்தூம் பின் முஹம்மது பின் ரஷீத் அல் மக்தூம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உலக அளவில் அரசாங்கங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் பொருளாதார, அபிவிருத்திச் சவால்களுக்கு நவீன தீர்வுகளை உருவாக்க ஒன்றிணைந்து செயற்படுவது குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

சர்வதேச கூட்டு முயற்சிகளை மேம்படுத்துவதற்கும் உலகளவில் ஆளுகை மற்றும் முக்கிய மூலோபாயத் துறைகளில் தலைவர்களுடன் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்பை ஷேக் முஹம்மது பாராட்டினார்.

கடந்த சில ஆண்டுகளில் இருதரப்பு கூட்டு முயற்சிகளால் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை வலுப்படுத்துவதில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆதரவையும் அவர் உறுதியளித்தார்.

இலங்கையில் முக்கியமான துறைகளின் வளர்ச்சிக்கு வழங்கிய ஆதரவுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இருதரப்பு உறவுகளின் விளைவாக முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். அர்த்தமுள்ள சர்வதேச கூட்டு முயற்சிகளை மேம்படுத்துவதிலும் உலகளாவிய நிர்வாக நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்வதிலும் சவால்களை எதிர்கொள்வதற்கும் புதிய வாய்ப்புகளை ஆராய்வதற்கும் தேவையான நுண்ணறிவு கொண்டவர்களாக அரசத் தலைவர்களை மாற்றுவதற்கும் உலக அரச உச்சிமாநாடு ஆற்றிய மகத்தான பங்கையும் ஜனாதிபதி பாராட்டினார்.

# மியன்மாரிலுள்ள இலங்கையர்களை மீட்க தாய்லாந்து உதவி அவசியம்

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சரிடம் இலங்கை அரசு கோரிக்கை

மியன்மாரின் மியாவடி பகுதியில் உள்ள சைபர் குற்ற நிலையங்களுக்கு கடத்தப்பட்ட இலங்கையர்களை மீட்டு பாதுகாப்பாக திருப்பி அனுப்புவது குறித்து தாய்லாந்தின் வெளியுறவு அமைச்சர் மாரிஸ் சங்கியம்போங்சாவுடன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் கலந்துரையாடியுள்ளார்.

இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக, வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் நேற்று (13) தாய்லாந்தின் வெளியுறவு அமைச்சர் மாரிஸ் சங்கியம்போங்சாவுடன் தொலைபேசி உரையாடலை நடத்தியதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், கடத்தப்பட்ட இலங்கையர்களை மீட்டு பாதுகாப்பாக திருப்பி அனுப்புவது தொடர்பாக அவசர உதவி தேவைப்படுவதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் முக்கியத்துவத்தை அமைச்சர் ஹேரத் எடுத்துரைத்துள்ளதுடன் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டுக்கு முன்னதாக, தாய்லாந்தின் பிம்ஸ்டெக் தலைமைத்துவத்துக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவளிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மியன்மாரின் மியாவடி பகுதியில் உள்ள சைபர் குற்ற நிலையங்களுக்கு கடத்தப்பட்ட இலங்கையர்களை மீட்டு திருப்பி அனுப்புவதில் தாய்லாந்து தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு முதல், மனித கடத்தல் கும்பல்களால் வலுக்கட்டாயமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 58 இலங்கையர்களைப் பாதுகாப்பாக மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்க தாய்லாந்து உதவி செய்துள்ளது. அதற்கமைய, இந்த சைபர் குற்ற நிலையங்களில் சித்திரவதை மற்றும் துஷ்பிரயோகத்தை எதிர்கொண்டதாகக் கூறப்படும் மீதமுள்ள 18 இலங்கையர்களை மீட்டு நாடு திரும்புவதை விரைவுபடுத்த தாய்லாந்தின் அவசர ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடத்தப்பட்ட மீதமுள்ள இலங்கையர்களை மீட்பதற்கான முயற்சியில் இலங்கைக்கு உதவி செய்வதாக தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் உறுதியளித்தார்.

### லசந்த...

இராணுவ பதவிநிலை சார்ஜன்ட் பிரேம் ஆனந்த உதலாகம, உப பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸசிறி சுகதபால, பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார ஆகியோரை விடுவிக்குமாறே சட்ட மா அதிபரினால் இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வரவு - செலவுத் திட்ட...

அரசாங்கத்தினால் எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான இறுதிக் கட்டத்தின் பூர்வாங்கக் கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, இறுதிக் கட்டத்தின் பூர்வாங்கக் கலந்துரையாடல்கள் நேற்று (13) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்றுள்ளது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் அரசாங்க அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர்.

### வருடாந்தம்...

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அநேகமாக சிறுவர் புற்றுநோய்களை குணப்படுத்துவதற்காக வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், சிறுவர் புற்றுநோயை தடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. சிறுவர் புற்று ஏற்படுவதற்கு சரியான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

சிறுவர் புற்றுநோயை நேரத்துடன் கண்டறிந்து முறையான காலப்பகுதியில் முறையான சிகிச்சைகளை வழங்குவதனூடாக சிறுவர் புற்றுநோயை குணப்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

சிறுவர் புற்று தொடர்பில் மஹரகம அபெக்‌ஷா வைத்தியசாலையின் சிறுவர் புற்று நோய் விசேட வைத்திய நிபுணர் மஹேந்திர சோமதிலக்க தெரிவிக்கையில்,

இடைக்கிடை காய்ச்சல் ஏற்படல், கிருமி தொற்றினால் காய்ச்சல், கை கால் பகுதிகளில் காயங்கள் ஏற்படுகிறது என்றாலோ அல்லது கிருமி தொற்றை எதிர்கொள்ளும் திறன் குறைவாக இருந்தால் ஒருவேளை இரத்தத்துடன் தொடர்புடைய புற்றாக இருக்கலாம். உணவின் மீதான விரக்தி, பாரம் குறைவு, சோர்வு போன்ற உடல் நிலைமைகள் இருந்தால் அதுவும் சிறுவர்கள் மத்தியில் புற்றுநோய்க்கான அறிகுறியாக இருக்கலாம்.

மூளை சார்ந்த புற்றுநோய்களை ஒரே சந்தர்ப்பத்தில் அடையாளம் காண்பது கடினம். பயிற்சி பெற்ற வைத்தியர்களிடம் மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்வது மிக அவசியமாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

### தமிழரசுக்...

வழக்கில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காகவே நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், வழக்கின் பிரதிவாதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், குகதாசன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் வழக்கை நிறைவுக்கு கொண்டுவருவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் வாதபிரதிவாதங்களும் இடம்பெற்றன.

இதுதொடர்பில் கட்சியின் மத்திய குழுவில் தீர்மானம் எடுத்து, அது பற்றித் தாம் பிரதிவாதி என்ற முறையில் நீதிமன்றத்துக்கு விவரமாக விளக்கங்களை சமர்ப்பித்திருக்கும் நிலையில், மேற்படி மூன்று பிரதிவாதிகளும் கட்சிக்குத் தெரியாமல் இணக்கத்துக்கான வாய்ப்பை வேண்டுமென்றே சீர்குலைக்க முயற்சித்துள்ளதாக எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சுமந்திரன் அவரது தரப்பில் அவரே சட்டத்தரணியாக ஆஜராகியிருந்ததுடன், கட்சியின் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் மற்றும் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி சயந்தன் முன்னிலையானார்.

கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர் இரத்தினவடிவேல் சார்பிலும் சட்டத்தரணி ஒருவர் முன்னிலையானார்.

சுமந்திரன், சத்தியலிங்கம், குலநாயகம், இரத்தினவடிவேல் ஆகிய பிரதிவாதிகள் கட்சியின் மத்திய குழுத் தீர்மானப்படி 156 உறுப்பினர்களுடன் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கான இணக்கத் திட்டத்துக்குத் தாங்கள் சம்மதிக்கின்றார்கள் எனத் தெரிவித்தனர்.

அதேசமயம் சிறிதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகியோர் 324 உறுப்பினர்களுடன் கட்சியின் மத்திய குழுவை கூட்டும் திட்டத்தை வலியுறுத்தினர்.

வழக்கில் இருத்தரப்பினருக்கும் இடையே இருக்கும் கருத்து முரண்பாடு இருப்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டிய மனுதாரர் தரப்பு சட்டத்தரணி, இக்காரணத்தால் இணக்கமான தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் அருகி உள்ளன என்றும் வழக்கு விசாரணை நடத்தியே முடிவு காண வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கின் பிரதிவாதிகளில் ஒருவரான கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அப்பதவியிலும் இல்லை, அவர் உயிரோடும் இல்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. அதனால், அந்த இடத்துக்குப் பதில் தலைவரின் பெயரை வழக்கில் பிரதிவாதியாக சேர்ப்பதா என்பது குறித்துத் தீர்மானிப்பதற்காக வழக்கு ஜூன் 04ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அந்தத் திகதியில் கட்சியின் பதில் தலைவர் எனக் கருதப்படுபவர் வழக்காளியாகச் சேர்க்கப்பட வேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்தது.

அந்த விடயம் தீர்மானிக்கப்பட்ட பின்னரே வழக்கை விசாரிப்பது குறித்த முடிவை நீதிமன்றம் எடுக்கும் என்றும் கூறப்படுகின்றது. அதனால் இந்த வழக்கு விசாரணைக்கு வர நீண்ட காலம் செல்லும் என்று சட்ட வட்டாரங்கள் குறிப்பிட்டன.

### சட்ட மா அதிபர்...

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அதிகாரத்தை அரசியல் அதிகார சக்திகளின் வசமாக்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் அரசாங்கத்தின் அவ்வாறான திட்டங்கள் வெற்றியளிக்காது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (13) ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் வழக்குகளை தயாரித்து, சட்டபூர்வமற்ற நிதி குற்றவியல் புலனாய்வுப் பிரிவொன்றை உருவாக்கி எங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார்கள். அரசியல் பழிவாங்கல்கள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதையும் நாங்கள் அன்று அவதானித்திருந்தோம். ஆனால், எங்களில் குற்றமில்லை என்பதை நீதிமன்றத்தினூடாக வெளிப்படுத்த வேண்டும் என்றே நம்புகிறோம். இன்றும் எமது நீதிமன்ற கட்டமைப்பின் மீது நம்பிக்கை இருக்கிறது.

நாட்டின் சட்ட மா அதிபர் திணைக்களம், நீதிமன்ற கட்டமைப்பு சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்பதுடன் அரசியல் தலையீடுகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அச்சுறுத்தல் விடுத்து நீதிமன்ற கட்டமைப்பை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர இந்த அரசாங்கம் எத்தனை முயற்சிகளை எடுத்தாலும் அதனை எமது நாட்டில் முன்னெடுக்க முடியாது.

அதேபோன்று, சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அதிகாரத்தை அரசியல் அதிகார சக்திகளின் வசமாக்குவதற்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறான விடயங்கள் இந்த நாட்டில் வெற்றியளிக்காது என்பதையும் இந்த அரசாங்கத்துக்கு நினைவுப்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்.

பொருத்தமற்ற வாக்குறுதிகளையும் எதிர்பார்ப்புகளையும் வழங்கிய இந்த அரசாங்கத்தில் போலி கதைகள் பொய்யானவை என்று வெளிப்பட்டதும் அடக்குமுறையினூடாக ஆட்சியை முன்னெடுக்க இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியை அடக்கி, அரச சேவைப் பிரிவினர் பொலிஸாரை அடக்கியாள முயற்சிக்கிறார்கள். இதே நிலைமையை 1980 – 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அவதானித்திருந்தோம். தற்போதைய அரசாங்கமும் தனது தனிப்பட்ட அரசியல் தேவைகளுக்காக அதே நிலைமைக்கு மீண்டும் நாட்டை கொண்டுச் செல்லவே முயற்சிக்கிறது.

அதன் உச்ச பலனாகவே தமது அரசியல் மேடைகளில் இருந்தவர்களை பொலிஸ் உயர் இடங்களுக்கு நியமிக்கிறார்கள். இளைஞர்கள் எதிர்பார்த்த மாற்றம் இதுவென்றால், 75 வருடகாலம் பற்றி பேசியவர்கள் 26 வருடங்கள் பின்னால் சென்றே நாட்டை ஆட்சி செய்து வருகிறார்கள் என்றார்.

### உள்ளூராட்சித் தேர்தல்...

குறைந்த நாட்களில் தேர்தலை நடத்துவதென்றால் எதிர்வரும் ஏப்ரல் 11ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவது நடைமுறைசிக்கலை உருவாக்கும் என்பதுடன் இந்நிலைமையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழு அதிகபட்ச நாட்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறெனில், ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையில் ஒரு தினத்தில் தேர்தலை நடத்த முடியும். அதற்கமைய, ஏப்ரல் மாதம் 22 மற்றும் 25ஆம் திகதியே தேர்தலை நடத்துவதற்கு உசிதமான திகதிகளாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மின் திட்டத்திலிருந்து...

இந்தியாவின் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் இலங்கையில் தனது 01 பில்லியன் அமெரிக்க டொலர் காற்றாலை மின் திட்டத்திலிருந்து விலக முடிவு செய்துள்ளது.

இந்த அதிரடி முடிவால் தேசிய மக்கள் சக்தி அரசுக்கும் இந்திய மத்திய அரசுக்குமிடையில் இராஜதந்திர முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான ஒப்புதல்களைப் பெற்றிருந்தாலும், தீர்க்கப்படாத சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் உயர்நீதிமன்ற வழக்கு உள்ளிட்ட இலங்கை பக்க தாமதங்களை நிறுவனம் காரணம் காட்டி, விலக முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை மற்றும் இந்திய குழுக்களுக்கு இடையே பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்தாலும், இலங்கையிலிருந்து மரியாதையுடன் விலக முடிவு செய்துள்ளதாக அதானி குழுமம் இலங்கை முதலீட்டு சபைக்கு (BoI) தெரிவித்துள்ளது.

இருப்பினும், இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் இன்னும் பதிலளிக்கவில்லை.

அண்மையில் புது டில்லிக்கு சென்றிருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் அவரது குழுவினரும் அதானி திட்டம் குறித்து இந்திய தலைவர்களுடன் விவாதித்தனர். ஆனால் அதானி மேற்கோள் காட்டிய காற்றாலை மின் கட்டணம் மிக அதிகமாக உள்ளது என்பதில் ஜனாதிபதி அநுர உறுதியாக இருந்தார்.

இந்திய தரப்பு இந்த விவகாரம் குறித்து மீண்டும் பேச்சுக்கு தயாராக இருப்பதாகக் கூறியது. அதானி விவகாரம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக்காக காத்திருப்பதாகவும் அதன் பிறகுதான் முடிவெடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அப்போது கூறியிருந்தது.

இந்தப் பின்னணியில் அதானியின் மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்திய மத்திய அரசுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்ட அதானி நிறுவனம், இலங்கையிலிருந்து பின்வாங்கியமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### மார்ச்...

மேலும், உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான இதற்கு முன்னர் அரசியல் கட்சிகளினால் செலுத்தப்பட்ட கட்டுப்பணத்தை மீள கொடுத்தால் மாத்திரமே எதிர்வரும் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தக் கூடியதாக இருக்குமென்றும் அந்தக் கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளன.

இந்த விடயம் தொடர்பான பேச்சுவார்த்தை தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நேற்று (13) இடம்பெற்ற போதே எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளினால் இவ்வாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது தொடர்பிலும் கட்சிகளின் செயலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

“விரைவாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்பது தொடர்பில் ஆழமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளோம். ஆனால், தற்போதுள்ள நிலைமையில் எதிர்வரும் 17 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் மார்ச் மாதம் 26 ஆம் திகதி வரை வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. எதிர்த்தரப்பில் 12 கட்சிகளை சேர்ந்த 66 பாராளுமன்ற உறுப்பினர்களே இருக்கிறார்கள். ஆளுங்கட்சித் தரப்பில் 159 பேர் இருக்கிறார்கள். அவ்வாறிருக்கையில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் நாங்களே முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டி ஏற்படும். அப்படியென்றால் 66 பேரும் பாராளுமன்றத்தில் இருந்து விவாதங்களில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும்.

இதற்கிடையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்புகள் வெளியாகினால், தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதில் சிக்கல் நிலை ஏற்படும். அதற்கமைய, வரவு - செலவுத்திட்ட விவாதங்கள் முடிந்ததன் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்.

அதேபோன்று கடந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு 80,000 க்கும் அதிகமான வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்திருந்தார்கள். பெருந்தொகை பணமும் கட்டுப்பணமாக செலுத்தப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு கட்சி ஒன்றரை கோடி ரூபாவுக்கும் அதிக தொகை பணத்தை செலவு செய்துள்ளது. எனவே, ஏற்கனவே கட்டுப்பணமாக செலுத்திய பணத்தை மீளப்பெற்றுக்கொண்டதன் பின்னரே மீண்டும் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தக் கூடியதாக இருக்கும்.

அரசியல் கட்சிகள் என்ற அடிப்படையில் எங்களிடம் பெருந்தொகை பணம் இல்லை. மக்கள் விடுதலை முன்னணிக்கு மாதாந்தம் 05 கோடி ரூபா அவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுகிறது. அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களினூடாக 60 கோடி ரூபாவுக்கும் அதிக தொகை அந்த கட்சியின் கணக்குக்கு வைப்பிலிடப்படுகிறது. ஆனால் எங்களுக்கு அப்படியொரு நிலைமை இருக்கிறது. எனவே, நாங்கள் ஏற்கனவே செலுத்திய கட்டுப்பணம் மீள கிடைத்ததுமே மீண்டும் கட்டுப்பணத்தை செலுத்தக் கூடியதாக இருக்கும்.

மூன்றாவது காரணம் ஏப்ரல் மாதம் தமிழ் சிங்கள புத்தாண்டு காலம் என்பதால் தெரிவத்தாட்சி அதிகாரிகள் உள்ளிட்ட சகல அரச உத்தியோகத்தர்களும் அந்த மாதத்தில் பணிபுரிய நேரிடும். அதுதொடர்பிலும் சிந்தித்தே செயற்பட வேண்டும் என்பதுடன் சாதாரண தரப் பரீட்சைத் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு கோரியுள்ளோம்.

திருத்தப்பட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான புதிய ஒழுங்குவிதிகள் சட்டத்தினூடாக அடுத்த தேர்தலை நடத்துவதற்கான தீர்மானத்தை எடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருக்கிறது.

இந்த சகல விடயங்களின் அடிப்படையிலும் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் இருக்கும் நெருக்கடி நிலைமையை கவனத்தில் கொண்டு சாதாரண காலப்பகுதிக்குள் தேர்தலை நடத்தமாறும் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளதுடன் இதுதொடர்பில் சகல கட்சி செயலாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்துமாறும் கோரியுள்ளோம்” என்று சுட்டிக்காட்டினார். அதற்கமைய, தேர்தல் ஆணைக்குழு விரைவில் அரசியல் கட்சிகளின் செயலாளர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மாசி மாதம் 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** அதிர்ஷ்டத்தை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்** வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மிதுனம்** நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

**கடகம்** வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**சிம்மம்** அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும்.

**கன்னி** நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**துலாம்** குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப்படை வீர்கள். வீண் குழப்பம் வேண்டாம்.

**விருச்சிகம்** தொழில் ரீதியில் பாராட்டுகள் கிடைக்கும். விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு** புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும். திட்டமிட்ட காரியங்களில் சாதனை செய்வீர்கள்.

**மகரம்** வெளிநாட்டுப் பயணம் நினைத்தது போல நிறைவேறும். உங்கள் சொத்துக்களின் மீது கவனம் செலுத்துங்கள்.

**கும்பம்** ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொறுமை இழந்துவிடாதீர்கள்.

**மீனம்** நினைத்த காரியத்தில் வெற்றி. நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும். உற்சாகமாக இருப்பீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | : துவிதியை மு.இ.9.52 வரை பின் திருதியை |
| **நட்சத்திரம்** | : பூரம் மு.இ.11.09 வரை பின் உத்திரம் |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : அமிர்த யோகம் மு.இ.11.09 வரை பின் சித்த யோகம் |
| **வார சூலை** | : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்** | : காலை 6.27 – 9.27 மணி வரை காலை 10.27 – 10.57 மணிவரை பகல் 1.27 – 3.27 மணிவரை |
| **ராகு காலம்** | : 10.57 – 12.27 மணிவரை |
| **எமகண்டம்** | : 3.27 – 4.2 மணிவரை |
| **குளிகை** | : 7.57 – 9.27 மணிவரை |
| **சந்திராஷ்டமம்** | : மகர-கும்ப ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

(பின்னிரவு 5.44 வரை மகர ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள் இன்று முன்னிரவு 9.07 மணிவரை**

அஸ்வினி, கார்த்திகை,ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம்,உத்திரம்,அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம்,உத்திராடம், திருவோணம்,சதயம்,உத்திரட்டாதி

**இன்று முன்னிரவு 11.09 மணிக்குமேல்**

பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம்,அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# பொருளாதார, முதலீட்டு தொடர்புகளை பலப்படுத்த டுபாய் – இலங்கைக்கு இடையில் ஒப்பந்தம்



உலக அரச உச்சி மாநாடு- 2025ஐ முன்னிட்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மேற்கொண்டிருந்த மூன்றுநாள் விஜயத்துடன் இணைந்ததாக ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையில் பொருளாதார மற்றும் முதலீட்டு தொடர்புகளை வலுவூட்டுவதற்கான ஊக்குவிப்பும் மற்றும் நெருங்கிய முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிதி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மொஹமட் பின் ஹாட் அல் ஹூசெதி மற்றும் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த இருதரப்பு ஒப்பந்தம், உலக சந்தைகளில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் வெளிநாடுகளில் முதலீடுகளை பாதுகாப்பாக மேற்கொள்வதற்கும் சட்ட வரைவொன்றை வழங்கும்.

முதலீட்டாளர் உரிமைகளை பாதுகாக்கவும் பொருளாதார ஒத்துழைப்புகளை மேம்படுத்தவும் விரிவான முதலீட்டு பாதுகாப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை மற்றும் கொள்கை வரைவு தயாரிப்பாளர்கள் தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான வசதிகளை வழங்குதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் நோக்கங்களாகும். இந்த ஒப்பந்தம் உலக பொருளாதார கூட்டிணைவை வலுப்படுத்தும் அதேவேளை இலங்கைக்கான முதலீட்டு வாய்ப்புகளை தேடுவதற்கான வசதிகளையும் வழங்கும்.

இருதரப்பு பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதி நிலைத்தன்மைக்கான முக்கியத்துவம் இதனால் வலியுறுத்தப்படுவதுடன், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் இரு நாடுகளும் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது. இலங்கைக்குள் வர்த்தக மற்றும் வணிக வேலைத்திட்டங்களை வலுப்படுத்துவதுடன் வெளிப்படைத்தன்மையான மற்றும் நிலையான முதலீட்டுச் சூழலை உருவாக்கவும் இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) ஊக்குவிப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பையும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

அதேபோல் இந்த ஒப்பந்தம் புதிய முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தவும் அதனால் பொருளாதார முன்னேற்றத்துக்கும் புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்கவும் வழிவகுக்கும்.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்டகால தொடர்புகளை வலுப்படுத்தி நிலையான முதலீடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் இருநாடுகளுக்கும் இடையில் வர்த்தக மற்றும் நிதி தொடர்புகளை மேம்படுத்தவும் வழிவகுப்பதாக இது அமையும்.

# இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக நுழைவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகர்

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைவதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அமைச்சரின் தலைமையில் அண்மையில் (07) பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகேவும் கலந்துகொண்டார்.

இந்திய மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழகத்துடனும் இந்திய உயர்ஸ்தானிகருடனும் அவசியமான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. மீனவர்களைப் பாதித்துள்ள இந்தப் பிரச்சினைக்கு முரண்பாடின்றி உடனடியாக தீர்வுகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன், சதொச வலையமைப்பு மூலம் மீன்களை விற்பனை செய்வதற்காக கடற்றொழில் மற்றும் வர்த்தக அமைச்சுகளுக்கிடையில் கூட்டுத் திட்டமொன்றை ஆரம்பித்தல் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இங்கு உரையாற்றிய வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, எதிர்காலத்தில் சதொச வர்த்தக நிலையங்களை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, மீன்களை விற்பனை செய்யத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்றார்.

சதொச வர்த்தக நிலையங்கள் ஊடாக மீன்களை விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கையை விரைவாக எடுக்க எதிர்பார்ப்பதாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். அதற்கமைய, நுகர்வோர் எளிதாக சமைக்கும் வகையில், மீன்வகைகளை பொதி செய்து வழங்கத்திட்டமிட்டுள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில், நாடு முழுவதும் காணப்படும் கடற்றொழில் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். தடைசெய்யப்பட்ட வலைகள் மற்றும் டைனமைட்டைப் பயன்படுத்தி மீன்பிடித்தல், நன்னீர் மீன்பிடித் தொழில் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நாட்டின் துறைமுகங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது குழுவின் தலைவர், இந்தப் பிரச்சினைகள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். மேலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள துறைமுகங்களை புனரமைப்பதில் அமைச்சு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

# வரலாற்று சிறப்புமிக்க நகுலேஸ்வரம் ஆலய கொடியேற்றம்

(பு.கஜிந்தன்)





பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான, ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப்பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று (13) ஆரம்பமானது.

காலை 7.00 மணியளவில் ஆரம்பமான அபிஷேகத்தையடுத்து, காலை 9.00 மணியளவில் வசந்த மண்டப பூஜை இடம்பெற்று, காலை 10.00 மணிக்கு வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

15 நாட்களைக் கொண்ட மகோற்சவத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி இரவு சப்பறத் திருவிழாவும் 26ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும் அன்றிரவு சிவராத்திரி சிறப்பு பூஜை வழிபாடுகளும் இடம்பெற்று மறுநாள் 27ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 பெப்ரவரி, 14ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# அமெரிக்காவும் இலங்கையும்

அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப்பின் நடவடிக்கைகளைப் பார்த்து ஒட்டுமொத்த உலகமே அதிர்ந்து போய் இருக்கிறது.

எந்த ஒரு நாட்டின் நிதி நிர்வாகத்துக்கும் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கும் வரி விதிப்பு அவசியம். ஆனால், சுங்கவரி விதிப்பின் மூலம் தன்னைச் சார்ந்திருக்கும் நாடுகளை அச்சுறுத்துவது மிக ஆபத்தானது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்க சட்டம்-ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதுதான் சரியாக இருக்குமே தவிர, அக்குற்றச்சாட்டின் அடிப்படையில் இறக்குமதிக்கு கூடுதல் வரி விதித்து அண்டை நாடுகளின் பொருளாதாரத்தை நிலைகுலைய வைப்பது எந்த விதத்தில் ஏற்புடையது என்பது தெரியவில்லை.

தனது திறந்த எல்லையைப் பயன்படுத்தி அண்டை நாடுகளில் இருந்தும் உலகின் பின்தங்கிய நாடுகளில் இருந்தும் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களை அமெரிக்கா தடுக்க முற்படுவதில் யாரும் தவறு காணமுடியாது. அதை எந்த ஒரு நாடும் அனுமதிக்கவும் செய்யாது. சட்டவிரோதமாகக் குடியேறுவது மட்டுமல்லாமல், போதைப் பொருள்களைக் கடத்துவதிலும் சிலர் ஈடுபடுவார்களேயானால், அவர்கள் தடுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை யாரும் மறுக்கவில்லை.

கனடா, மெக்ஸிகோ நாடுகளின் மீது விதிக்கப்பட்ட 25% கூடுதல் இறக்குமதி வரி விதிப்பை அமெரிக்க அரசு 30 நாட்களுக்கு நிறுத்தி வைத்திருக்கிறது. அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் புகையிலைப் பொருள்கள், காய்கறிகள், வீட்டு உபயோகப் பொருள்கள், ஆயுதங்கள், இராணுவம் சார்ந்த பொருள்களுக்கு தனது எதிர் வினையாக கனடா கூடுதலாக 25% வரி விதிப்பதாக அறிவித்தது தான் அதற்கு காரணம் என்று கூறிவிட முடியாது. ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு உள்நாட்டில் தரப்பட்ட அழுத்தம்கூட மிக முக்கியமான காரணம்.

மற்ற நாடுகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இலாபம் அடைவதைப் போலவே, அமெரிக்காவும் இறக்குமதிகளை நம்பி இருக்கிறது என்பதுதான் உள்நாட்டு அழுத்தத்தின் பின்னணி. குறிப்பாக, மோட்டார் வாகன உற்பத்தி, கனடா, மெக்ஸிகோ நாடுகளில் உள்ள உதிரிப் பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களைச் சார்ந்து இருப்பதை ஜனாதிபதி ட்ரம்ப் மறந்து விட்டார் என்று தோன்றுகிறது.

அமெரிக்கா விதித்திருக்கும் கூடுதல் இறக்குமதி வரி விதிப்பு காரணமாக உற்பத்திச் செலவு அதிகரித்து, அமெரிக்காவில் தயாரிக்கப்படும் மோட்டார் வாகனங்களின் விலை கடுமையாக அதிகரிக்கும். உற்பத்திக்கு அத்தியாவசியமான இரும்பு , அலுமினியம், எரிசக்தி உள்ளிட்டவைகளின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டு அவற்றின் விலைகள் அதிகரிக்கும். அமெரிக்கப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக சர்வதேசச் சந்தையில் அமெரிக்கப் பொருள்கள் போட்டியிட முடியாத நிலை ஏற்படுவதுடன் தனது மிக நெருக்கமான தோழமை நாடுகள் உடனான உறவு பாதிக்கப்படும் என்று நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

பிறகு ஏன் அமெரிக்க ஜனாதிபதி இப்படி ஒரு நடவடிக்கையில் இறங்கினார் என்கிற கேள்வி எழுகிறது. கடந்த பல ஆண்டுகளாகவே அதிக மதிப்புள்ள தொழில்நுட்பம் மேம்பட்ட பொருள்கள், இராணுவத் தளவாடங்கள் போன்றவற்றைத்தான் அமெரிக்கா ஏற்றுமதி செய்து வருகிறது. அதேநேரத்தில், அதிகளவில் நுகர்வோர் சார்ந்த அன்றாட உபயோகப் பொருட்கள் பெரும்பாலானவை அமெரிக்காவால் இறக்குமதி செய்யப்படுகின்றன. பெரும்பாலான நாடுகள் குறிப்பாக இந்தியா, பிரேஸில், தென்னாபிரிக்கா நாடுகள் தொழில்நுட்ப மேம்பாடு அடைந்ததைத் தொடர்ந்து தாங்களே உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன.

இன்றைய நிலையில், நிலுவையில் உள்ள அமெரிக்கக் கடன் 33 டிரில்லியன் அமெரிக்க டொலர். பல நாடுகளுடன் அமெரிக்காவுக்கு வர்த்தகப் பற்றாக்குறை நிலவுகிறது. அதை எதிர்கொள்ள முடியாமல் அமெரிக்கா திணறுகிறது. அதன் வெளிப்பாடாகத்தான் ஜனாதிபதி ட்ரம்ப்பின் இது போன்ற அதிரடி நடவடிக்கைகளை பார்க்க வேண்டும்.

இலங்கையிலிருந்து இரத்தினக் கற்கள், ஆயத்த ஆடைகள், உள்ளிட்டவைதான் அதிகளவிலான அமெரிக்க ஏற்றுமதிகள்.

அமெரிக்காவின் நுகர்வுச் சந்தையில் ஏற்படும் விலைவாசி உயர்வு, இறக்குமதிகளைப் பாதிக்கக்கூடும். வர்த்தகப் போர் தொடங்க இருக்கும் சூழலில், ஏற்றுமதிகளைப் பாதுகாக்க இருநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதும் உள்நாட்டு உற்பத்திக்கு முன்னுரிமை அளிப்பதும் அவசியமாகின்றன.

சீனாவுடன் இலங்கை பொருளாதார ரீதியாக நெருக்கமாக செயற்பட்டு வருவதால் , பீஜிங் மீது வொஷிங்டன் காட்டும் வெறுப்பு, அதிரடி நடவடிக்கை கொழும்புக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும். ஏற்கனவே அமெரிக்காவின் பொருளாதார நிதியுதவி நிறுத்தச் செயற்பாடுகளால் பாதிப்புற்றுள்ள இலங்கை அவற்றில் இருந்து மீண்டு புதிய பொருளாதார பாதைகளை தேடவேண்டிய நிலையிலுள்ளது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. பொறுப்புடன் அரசு செயற்படவேண்டிய தருணமிது.

## மக்கள் கடிதம்

வாசகர்களே!

உங்கள் பகுதியில் நிலவும் குறைபாடுகள், தேவைகளை சுட்டிக்காட்ட நாங்கள் இடம் தருகிறோம். தட்டச்சு செய்தோ, எழுத்து மூலமாகவோ அவற்றை நீங்கள் எமக்கு அனுப்பலாம். அவற்றை பிரசுரிப்போம்.

ஆசிரியர்,
மக்கள் கடிதம், தமிழன் பத்திரிகை நிறுவனம்,
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
அல்லது thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.



# மனச்சான்றின் வழி வாழ்வோம்

"மனிதனின் துன்பத்துக்குக காரணம், அவனது ஆசையே'' என்றார் புத்தர் . மனிதன் படிக்கும் திறன் பெற்றிருப்பதால் அறிவைப் பெறுகிறான். தன் அனுபவத்தால் பட்டறிவையும் பெறுகிறான். எனவே, அன்றாட நிகழ்வுகளில் எது நல்லது, எது கெட்டது என பிரித்தறியும் திறனையும் பெறுகிறான். ஆறறிவு பெற்ற அவனுக்கு மட்டுமே, அறவழியிலும் அறமற்றவழியிலும் வாழத் தெரியும். அவன் தன் படிப்பறிவாலும் பட்டறிவாலும் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளை வளர்த்துக் கொள்கிறான். அதை நோக்கிப் பயணிக்கவும் செய்கிறான்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்னும் சொல்லாடலும் நம்மிடையே வழக்கில் உள்ளது. மகாபாரதத்தில் பாண்டவர் நல்லவர்களாக விளங்கினர். அவரது சொல்லும் செயலும் ஒன்றாகவே இருந்தன. ஆனால், கௌரவர்கள் பொறாமை, வஞ்சம், சூழ்ச்சி ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்கினர். எண்ணம், சொல், செயலில் தீயவர்களாக இருந்தனர். அதனால்தான் நல்லவர்களாக இருந்த பாண்டவர்கள் பாரதப்போரில் வெற்றி பெற்றனர்.

நம் மனச்சான்று நல்லவை எல்லாம் அறம் என்பதையும் தீயவையெல்லாம் அறமற்றவை என்பதையும் பொதுவாக ஒப்புக்கொள்கிறது. ஆனால், நம் ஒவ்வொருவருக்கும் வாழ்வில் வெவ்வேறு அறம் சார்ந்த கோட்பாடுகள் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், நம் வாழ்வை சிக்கலில்லாமல் வாழ நமக்குப் பணம் தேவைப்படுகிறது. அதற்காக செய்யும் அறமற்ற செயல்களையும் நம் மனச்சான்று அறமுள்ள செயல்களாகவே பார்க்கிறது.

இதன் காரணமாகத்தான் சமூகத்தில் குற்றங்கள் பெருகி வருகின்றன. குற்றவாளிகளின் பணப்பலத்துக்கு சட்டத்தின் ஓட்டைகள் துணைபோகின்றன. நீதிமன்றங்கள் அறத்தின் பக்கம் இருந்தாலும் குற்றம் சுமத்தப்பட்டவர்தான் குற்றத்தைச் செய்தார் என்பதை நிரூபிப்பதற்குச் சாட்சிகள் தேவைப்படுகின்றன.

"நான் என் வாழ்வில் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ததில்லை. என் மனமறிந்தவரை அறவழியில் தான் செயலாற்றுகின்றேன். எனினும் துன்பப்படுகிறேன்'' என்று நம்மில் பலர் வருத்தப்படுவதுண்டு. இப்படி ஓர் எண்ணம் தோன்றினால் இதுதான் நாம் நமது செயலை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய சரியான தருணம்.

சூதாடுதல் தவறு என்பது உலகுக்கே பொதுவான அறம். ஆனால் மகாபாரதத்தில் தருமரோ, கௌரவர் நட்புடன் அழைப்பதால் சூதாடலாமெனக் கொண்ட அறத்தின் காரணமாக, நாடு உட்பட அனைத்தையும் பணயம் வைத்து சூதாடித் தோற்கிறார். இதுபோல் துரியோதனனும் சகுனியும் கூட அவர்தம் அறமல்லாத செயலுக்கு ஆயிரம் நியாயமான காரணங்களைச் சொல்ல முன் வரலாம்.

நம்மில் பலர் துன்பப்படுவதற்குக் காரணம், நாம் பொதுவெளிகளிலும் குடும்பங்களிலும் நடைபெறும் அநியாயங்களுக்கு எதிராக சிறு எதிர்ப்பைக் கூட காட்டாமல், மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூட இருக்கலாம்.

பொதுவாக, ஒவ்வொரு குற்றத்துக்குப் பின்னணியிலும் பல நியாயங்கள் சொல்லப்படுவதுண்டு. இதுவே நியாயம் எனக் கருதிப் பல அநியாயங்கள் நடப்பதுமுண்டு. இந்த இடத்தில் நேர்மையாகச் சிந்தித்தால், அறம் ஆளுக்கேற்றாற் போல் மாறுவது தவறே ஆகும். அறம் என்பதற்கு நம் அனைவரின் மனச்சான்றும் ஒரே வடிவத்தைக் கொடுப்பதுதான் சரி என்றே தோன்றுகிறது. நம் மனச்சான்று, தவறான ஒன்றை சரியானது என்று ஒரு போதும் சொல்லாது. திருடுவது தவறு என்பது திருடனுக்குத் தெரிகிறது. அதனால்தான் யாருக்கும் தெரியாமல் திருடுகிறான். காவல் துறையிடமிருந்து தப்பிக்க முயல்கிறான்.

மனச்சான்றின் வழியில் வாழ்ந்தால்தான் அறம் தழைக்கும். நம்வாழ்வு சிறக்கும். நல்லறத்தின் வாழ்வின் விளைவாக உலகில் நன்மைகள் மட்டுமே நிறையும்.

பிறருக்கு ஒரு சிறு தீங்கைக் கூட ஏற்படுத்தாத நம் நல்ல எண்ணம், சொல், செயல் மட்டுமே அறமாகும். அத்தகைய வலிமை வாய்ந்த அறத்தின் வழியில் நாம் வாழும்போது, நமக்கு நன்மையே ஏற்படும். ஆனால், நன்மை ஏற்பட தாமதமாகலாம். இதைப் பற்றி வருந்தக் கூடாது. நம் செயலில் எது அறம், எது அறமல்லாதது என அவ்வப்போது தற்சோதனை செய்து பார்ப்பது நல்லது. இது நாம் எங்கே தவறிழைத்தோம் என்பதை நமக்கு தெளிவாக உணர்த்தும்.

அறிந்தோ அறியாமலோ தவறிழைத்தலை மனித சமுதாயம் இயல்பாகக் கொண்டிருக்கிறது. இதுதான் நடப்பியலும் கூட. இச்சூழலில் இத்தகைய அறக் கொள்கையோடு நாம் வாழ்வது சாத்தியமா என்ற கவலையும் தோன்றுகிறது. ஆனால் அறம் சார்ந்த வாழ்க்கையை மட்டுமே மனச்சான்றின் வழியில் வாழவேண்டும் என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும்.

தனக்கு ஏற்படுகிற துன்பத்துக்குத் தானே முதல் காரணம் என மனம் திறந்து ஒப்புக்கொள்ளும் அறம், சங்க கால தமிழனிடம் இருந்திருக்கிறது. அதனால்தான், "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்னும் உண்மையை அப்போதே சங்கப்பாடல் நேர்மையாக எடுத்துரைக்கிறது.

நாம் அனைவரும் வாழ்வில் எப்போதும் இன்புற்றிருக்கவே விரும்புகிறோம். இன்பம் என்பது நாம் ஆற்றும் நற்செயலின் விளைவே ஆகும். நமது நற்செயல் நமது நற்சிந்தனையில் உருவாகிறது. ஆக அனைத்தும் நம்மிடத்தில்தான் உள்ளது. அதனால்தான் நமக்கு நடக்கும் நன்மைக்கு மட்டுமல்ல தீமைக்கும் நாமே பொறுப்பானவர்களாகிறோம்.

எனவே, நல்வழியில் இருந்து நாம் என்றும் விலகாமலிருக்க, நம் செயலைச் சுய அறப்பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இத்தெளிவைப் பெற்றவர் யாரையும் வியக்கவோ இகழவோ மாட்டார். 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்னும் கலியன் பூங்குன்றனார் வரிகளை எந்த நாளும் நம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ வேண்டியது நம் கடமையாகும். இதை உணர்ந்து நம் மனச்சான்றின் வழியில் நாம் அனைவரும் வாழ்வை நகர்த்துவோம்.

***நன்றி - தினமணி***



## நக்கல் நமசிவாயம்

இந்த குரங்கு தொல்லையை சமாளிக்க ட்ரம்ப் ஐயாட்ட ஆலோசனை கேக்க ஏலாதோ?



## இன்றைய நாளில்..

- 1815 – கண்டிப் போர்கள்: கண்டி இராச்சியத்தைப் பிரித்தானியர் கைப்பற்றினர். கண்டி ஒப்பந்தம் மார்ச் 2இல் கையெழுத்திடப்பட்டது.
- 1924 – ஐ.பி.எம். நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1961 – 103ஆவது தனிமம் இலாரென்சியம் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1987 – யாழ்ப்பாணம், கைதடியில் இடம்பெற்ற வெடி விபத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பொன்னம்மான் உட்பட ஏழு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.
- 1987 – தமிழீழ விடுதலைப் புலிகளின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி சேவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1989 – ஜி.பி.எஸ். திட்டத்தின் 24 செய்மதிகளில் முதலாவது விண்ணில் ஏவப்பட்டது.
- 1989 – 'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதியதற்காக சல்மான் ருஷ்டிக்கு ஈரானியத் தலைவர் ரூஹுல்லா கொமெய்னி மரண தண்டனை விதித்தார்.

1990 – வொயேஜர்-1 விண்கலம் பூமியின் படம் ஒன்றை எடுத்தது. இப்படம் பின்னர் 'வெளிர் நீலப் புள்ளி' எனப் பெயர் பெற்றது.

2000 – நியர் சூமேக்கர் என்ற விண்கலம் 433-ஈரோஸ் என்ற சிறுகோளின் சுற்று வட்டத்துக்குள் பிரவேசித்தது. சிறுகோள் ஒன்றின் சுற்றுக்குள் சென்ற முதலாவது விண்கலம் இதுவாகும்.

2011 – அரேபிய வசந்தம்: பஹ்ரைன் எழுச்சி ஆரம்பமானது.

2017 – ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு: தமிழக முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா, வி.கே.சசிகலா உட்பட நான்கு பேர் குற்றவாளிகள் என இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

# நல்லாட்சி அரசாங்கத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கல்விசாரா ஊழியர்களுக்கு கல்வித் தகைமைகளில்லை; விசாரணைக்காக குழுவொன்று நியமிப்பு

## எட்டு வருடங்களாக வழங்கப்பட்ட ஊதியத்தையும் திரும்பப் பெறவும் நடவடிக்கை

(எம்.ஏ.அமீனுல்லா)

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது கல்வி அமைச்சால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் கல்வி அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்ட பெருமளவான கல்விசாரா ஊழியர்கள் தேவையான கல்வித் தகைமைகளைப் பூர்த்திசெய்யவில்லையெனத் தெரியவந்துள்ளது.

அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் போலி கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து வேலைபெற்ற பலரது சேவைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், ஏறக்குறைய எட்டு வருடங்களாக அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத் தொகையும் தற்போது மீளப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் மாகாணக் கல்வித் திணைக்களம் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இது தொடர்பாக விசாரணை நடத்தக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், கல்விச் சான்றிதழை முன்வைக்காமல் சிலர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த நல்லாட்சியின்போது பாதுகாப்பு காவலாளி, தொழிலாளி, ஆய்வக உதவியாளர் உள்ளிட்ட பல பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு அவர்கள் நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் கல்வி அலுவலகங்களில் பணியாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

முறையின்றி பணிக்கமர்த்தப்பட்ட நபர்களை பணியிடங்களுக்கு அனுப்புவதில் ஓர் ஒழுங்கு முறை பின்பற்றப்படாமை காரணமாக கண்டியிலுள்ள பல முக்கிய தேசிய பாடசாலைகளில் காவலர், தொழிலாளர் மற்றும் ஆய்வக உதவியாளர் ஆகிய சேவைகளுக்கு அதிகளவான பணியாளர்கள் உள்ளனர்.

# கல்வித்துறை தொழிற்சங்கங்களுடனான சந்திப்பு



கல்வித்துறையில் உள்ள அனைத்து தொழில்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (12) பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் கல்வி பிரதியமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன ஆகியோரின் இணைத்தலைமையில் கல்வியமைச்சில் நடைபெற்றது.

கல்வி நிர்வாகம், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய கல்வியியலாளர்கள் மற்றும் ஆசிரியர் சேவை போன்ற அனைத்து துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள, கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து தங்கள் கருத்துகளையும் பரிந்துரைகளையும் முன்வைக்க வருகை தந்திருந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தது. முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து பிரதமர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோர் கவனத்தில் கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ, தேசிய கல்வி நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள் இணைந்து மகஜர் கையளிப்பு




(அஸ்லம் எஸ்.மௌலானா)



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுவுக்கான திகதி அறிவிப்பதற்கு முன்பு தேர்தல் ஆணைக்குழுவானது சகல அரசியல் கட்சிச் செயலாளர்களையும் சந்திக்க வேண்டுமென்று சில முக்கிய அரசியல் கட்சிகள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

இது தொடர்பான மகஜர் ஒன்று தேர்தல் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்கவிடம் நேற்று (13) கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி., ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் எம்.பி., மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. உள்ளிட்டோர் தேர்தல் செயலகத்துக்கு நேரடியாகச் சென்று இம்மகஜரைக் கையளித்துள்ளனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட தேர்தல் ஆணையாளர், குறித்த கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிப்பதாக உறுதியளித்துள்ளார் என்றும் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

# மருந்துச்சீட்டு இன்றி மருந்துகளை விற்பனை செய்த மருந்தக ஊழியர்கள் இருவருக்கு ரூ.40ஆயிரம் அபராதம்

(கண்டி நிருபர்)

கண்டி, கட்டுகஸ்தோட்டையிலுள்ள இரண்டு மருந்தகங்களில் மருத்துவச் சீட்டின்றி மருந்துகளை விற்பனை செய்த இரண்டு ஊழியர்களுக்கு தலா 20ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்டப் பிராந்திய சுகாதார வைத்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

சூட்சுமமான முறையில் நபரொருவர் மூலம் மருத்துவச் சீட்டு இல்லாமல் சம்பந்தப்பட்ட கடைகளில் மருந்துகளை வாங்க வைத்து இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சேனக்க தலகலவின் பணிப்புரையின் பேரில் மாவட்ட உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர் நிஷாந்த ஜயவீர உள்ளிட்ட குழுவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

மருத்துவ பரிந்துரைகள் இல்லாமல் விருப்பத்துக்கேற்ப நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்வது கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துமென்றும் அதிகளவு நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொண்ட பிறகு மனித உடல் எந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கும் பதிலளிக்காதென்றும் வைத்தியர் சேனக்க தலகல தெரிவித்தார்.

இதுபோன்ற நிலைமைகளுக்கு பலர் உள்வாங்கப்பட்டிருந்ததன் காரணமாக பலர் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகியுள்ளதாக முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும் மருந்துச்சீட்டு இல்லாமல் நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்கும் மருந்துக் கடைகளில் தொடர்ந்து சோதனை நடத்தப்படுமென்றும் அவர் மேலும் கூறினார்.

# ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் வருடாந்த பேராளர் மாநாடு







ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் வருடாந்த பேராளர் மாநாடு கொழும்பு, மருதானை,குப்பியாவத்தை மாநகர மண்டபத்தில் முன்னாள் அமைச்சரும் அக்கட்சியின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத்தின் நெறிப்படுத்தலில் நேற்று முன்தினம் (12) நாட்டின் பல்வேறு பிரதேச பேராளர்களின் பிரசன்னத்துடன் விமர்சையாக நடைபெற்றது.

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் யாப்பில் திருத்தமொன்றை மேற்கொண்டு சிரேஷ்ட பிரதித்தலைவர் எனும் பதவி நீக்கப்பட்டு சிரேஷ்ட தலைவர் எனும் பதவி புதிதாக இணைக்கப்பட்டு அப்பதவிக்கு முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவுசெய்யப்பட்டார்.

மேலும் புதிய தவிசாளராக மௌலவி ஐ.எல்.எம். மிப்ளால், அண்மையில் தனது செயலாளர் பதவியை இராஜிநாமா செய்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரீ. ஹசனலியின் இடத்துக்கு புதிய செயலாளராக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான், பொருளாளராக எச்.எம். ஹக்கீம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

மேலும், தலைவர் ஒன்று எனும் பதவிக்கு அக்கரைப்பற்றைச் சேர்ந்த அக்பர் அலி, தலைவர் இரண்டு எனும் பதவிக்கு சாய்ந்தமருதைச் சேர்ந்த கலாநிதி ஹக்கீம் செரீப், தேசிய அமைப்பாளராக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி.காதர், தேசிய பிரசார செயலாளராக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் முஸம்மில், தேசிய இணைப்புச் செயலாளராக டாக்டர் முஹம்மட் பரீட், உலமா பிரிவின் தலைவராக முஹம்மட் ஆமீர் முப்தி உட்பட பல நிர்வாகிகளும் இதன்போது தெரிவு செய்யப்பட்டார்கள்.

இந்தப் பேராளர் மாநாட்டின் பிரகடனமாக பலஸ்தீன் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும், காஷ்மீருக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரமளிக்க முன்வர வேண்டும், ஜனாஸா எரிப்புக்கு எதிராக விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும், அந்த எரிப்பில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பழி சுமந்துள்ள முஸ்லிம்களின் மீது குத்தப்பட்ட வீணான சொற்பிரயோகங்கள் களையப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும், இவ்வாறான தாக்குதல்களை ஒரு சமூகத்தின் மீது சுமத்தாமல் அரசே பொறுப்பேற்க வேண்டும், சுதந்திரத்துக்குப் பின்னரான அமைச்சரவையில் இப்போதைய அமைச்சரவையிலேயே முஸ்லிம்கள் நிராகரிக்கப்பட்டுள்ளார்கள். அந்த விடயம் நிவர்த்திக்கப்பட வேண்டும், மேல் மாகாணத்தில் கொழும்பு போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களின் கல்வியை மேம்படுத்தத் தேவையான வசதிகளை அரசு வழங்க முன்வர வேண்டும், முஸ்லிம்கள் கல்வி கற்க புதிய பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டுமென்றும் முன்மொழியப்பட்டு பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

நீண்டகாலமாக ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பணியாற்றிவந்த பலருக்கும் உயர்பீட உறுப்பினர் பதவிகள் உட்பட முக்கிய பல பொறுப்புகளும் இதன்போது வழங்கப்பட்டன.

# ‘விடத்தல்தீவு அலிகார்– வரலாற்றுக் கருவூலங்கள்’ நூல் வெளியீட்டு விழா

‘விடத்தல்தீவு அலிகார் - வரலாற்றுக் கருவூலங்கள்’ நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 22ஆம் திகதி சனிக்கிழமை புத்தளம், தில்லையடி ஏ.ஜே.வரவேற்பு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவில், உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலுள்ள அலிகாரின் பழைய மாணவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட செயலாளர் கே. கணேஸ்வரன் ,சிறப்பு அதிதியாக மடு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.கி. வொலன்ரைன் ஆகியோர் பங்கேற்பர்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான முன்னாள் இலங்கை நிரந்தரப் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அஸீஸ் நூலாய்வையும் வவுனியா பல்கலைக் கழக ஆங்கிலத் துறைத் தலைவர் பேராசிரியர் ஜெயசீலன் ஞானசீலன் நூல் அறிமுகவுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

# வாழ்க்கைப் பாடம்

ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

## மறப்போம்! மன்னிப்போம்!

*நாம் பிறறை மன்னிப்பது, அவர்களின் குற்றங்குறைகளை- தப்புத்தவறுகளை பொறுப்பது, மறப்பது ஒன்றும் நமது பலவீனமோ இயலாமையோ அல்ல; அது நமது கோழைத்தனமும் அல்ல.*

*உண்மையில் மன்னிப்பவன் பலசாலி; மனோவலிமை கொண்டவன்; பரந்த,விசாலமான உள்ளம் படைத்தவன்.*

*மன்னிக்கும் மனப்பான்மை ஒருவரிடம் காணப்படுவது அவரது உள்ளம் தூய்மையாக இருக்கின்றது என்பதற்கான அடையாளம் மட்டுமல்ல, அது முதிர்ச்சியின் அடையாளம்; பக்குவத்தின் வெளிப்பாடு.*

*மன்னிக்கின்றபோது மனதில் இருக்கின்ற அசுத்தம் வெளியேற்றப்படுகிறது; மனம் சுத்தமாகிறது. மனம் சுத்தமாக இருப்பது உடல்சுத்தத்தைப் போல ஆரோக்கிய வாழ்வுக்கு மிகவும் முக்கியம்.*

*ஒருவரின் உடல், உள நலக்குறைவுக்கு அவரது பிழைபொறுக்கா மனமும் ஒரு முக்கிய காரணமாக அமையும்.*

*மன்னிக்கும் மனப்பாங்கு இறை விசுவாசிகளின் முக்கியமான ஒரு பண்பு.*

*அல்- குர்ஆன் சொல்கின்றது:*

*“அவர்கள் தமது கோபத்தை மென்று விழுங்கி விடுபவர்கள்; மனிதர்(களின் தவறு)களை மன்னிப்பவர்கள்; அல்லாஹ் (இப்படிப்பட்ட)நல்லவர்களையே நேசிக்கின்றான்.”*

*அருளாளன் அல்லாஹ் ‘மன்னிப்பவன்’ என அல் - குர்ஆன் சுமார் எழுபது இடங்களில் குறிப்பிடுகின்றது.*

*தனது அடியார்களும் மன்னிக்கும் மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பதை அல்லாஹ் விரும்புகின்றான்.*

*நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் மிகைத்து நின்ற பண்பு அன்பும் அதனடியாகப் பிறந்த மன்னிக்கும் மனப்பாங்கும் தான்.*

*பகைமை,வெறுப்பு,கோபம்,பொறாமை இதுவேஷம் முதலான உள நோய்கள் உள்ள நிலையில் சுவனம் நுழைய முடியாது.*

*ஒரு முறை இமாம் அபூ ஹனீபா (றஹ்) அவர்களைப் பார்த்து ஒருவர், நீர் ஒரு வழிகேடர் என்றார். அதற்கு இமாம் அவர்கள்,நீர் சொல்வது உண்மையாக இருந்தால் அல்லாஹ் என்னை மன்னிப்பானாக; நீர் சொல்வது உண்மைக்குப் புறம்பானதாக இருந்தால் அவன் உம்மை மன்னிப்பானாக என்றார்கள். எத்தகைய சுத்தமான உள்ளம் இது!*


*மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னார் செய்த ஒரு பிரார்த்தனை மிக அற்புதமானது:*

*“யா அல்லாஹ்,நமது விஷயத்தில் யாருடைய உள்ளங்கள் இறுகிப்போய் இருந்தாலும் பரவாயில்லை; அவர்கள் விஷயத்தில் நமது உள்ளங்களை மாத்திரம் என்றும் - எப்போதும் விரிவானவையாகவும் விசாலமானவையாகவும் ஆக்கிவிடு!”*

*பொறுப்போம்; மறப்போம்; மன்னிப்போம்!*

# தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவர் சடலமாக மீட்பு

## மரணம் சந்தேகத்துக்குரியதென பொலிஸார் தெரிவிப்பு



(ஹனபி எம்.தாசிம்)

மல்வானை, உலஹிடிவலை பகுதியில் மரத்தில் தொங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்ட ஆணொருவரின் சடலம் சந்தேகத்துக்குரியதென பியகம பொலிஸார் மஹர நீதவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

அதன்படி, மஹர பதில் நீதவான் வாசனா எல்லாவல சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று ஸ்தல விசாரணையை மேற்கொண்டு சடலத்தை பிரேதபரிசோதனைக்காக ராகம ஆதார வைத்தியசாலைக்கு அனுப்புமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் மல்வானை,உலஹிடிவலை பிரதேசத்தைச் சேர்ந்த 37வயதுடைய எம்.டி.சுசந்த பிரியகுமார என அடையாளம் காணப்பட்டுள்ளார்.இறந்தவர் அவரது தாயாருக்கும் மஹரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் எழுதியிருந்த இரண்டு கடிதங்களையும் தாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.அதில் மஹரகம பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எழுதப்பட்ட கடிதத்தில் மஹரகம பகுதியிலுள்ள ஒரு வெல்டிங் பட்டறையில் தான் பணிபுரிந்ததாகவும் பலரால் தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதால் கடுமையான அழுத்தத்தில் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பியகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கலுக்கு ஒரகல் நிறுவனம் ஆதரவு

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற உலக அரச உச்சி மாநாட்டின் (WGS) பின்னர் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த செவ்வாய்க்கிழமை (11) ஒரகல் நிறுவனத்தின் நிறைவேற்று உப தலைவர் மைக் சிசிலியாவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பொருளாதாரம் மற்றும் நிர்வாகச் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக இலங்கையின் டிஜிட்டல் மாற்றம், பின்டெக் சேவை மற்றும் கிளவுட் உட்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளல் தொடர்பில் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

இலங்கையின் டிஜிட்டல்மயமாக்கலுக்கு ஆதரவளிக்க ஒரகல் கிளவுட் உட்கட்டமைப்பு (OCI) வழங்க குறித்த நிறுவனம் விருப்பம் தெரிவித்ததுடன், தரவு சுயாதீனத் தன்மை மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாடுகளை உறுதிப்படுத்தி, அரசாங்க விண்ணப்பங்கள், இலத்திரனியல் நிர்வாக வசதிகள் மற்றும் தேசிய தரவுக் கட்டமைப்பொன்றை ஸ்தாபிப்பதற்கும் முன்வருமாறு ஜனாதிபதி ஒரகல் நிறுவனத்துக்கு அழைப்பு விடுத்தார்.

பணமில்லா பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் நகர்வை விரைவுபடுத்தும் நோக்கில் ஜனாதிபதி மற்றும் ஒரகல் நிறுவனத்தின் நிறைவேற்று உப தலைவர் மைக் சிசிலியா ஆகியோர் பின்டெக் மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவு வசதிகளுக்கான ஆரம்பகட்ட முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடினர்.

இதற்காக கொழும்பு துறைமுக நகரத்துக்குள் டிஜிட்டல் மயமாக்கல் மையமொன்றை அமைக்குமாறு ஒரகல் நிறுவனத்துக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, அது தெற்காசிய செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கிளவுட் மையமாகச் (Cloud Hub) செயற்படும். அதற்கான குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புமாறு ஜனாதிபதி மைக் சிசிலியாவிடம் கோரிக்கை விடுத்தார்.

பிராந்திய அடிப்படையிலான டிஜிட்டல் மாற்றம் மற்றும் புத்தாக்கத்துக்கான ஒரகல் நிறுவனத்தின் நோக்குக்கமைய அதன் தெற்காசிய செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கிளவுட் மையமொன்றை (Cloud Hub) கொழும்பு துறைமுக நகரில் அமைப்பதற்கு ஒரகல் நிறுவனம் ஆர்வமாக உள்ளதாக அந்த நிறுவனத்தின் நிறைவேற்று உப தலைவர் தெரிவித்தார். இது ஒரு மூலோபாய நடவடிக்கை என்ற வகையில் செயற்கை நுண்ணறிவினூடாக செயற்படுத்தப்படும் கிளவுட் வசதிகளில் இலங்கையை பிராந்தியத்தின் முன்னோடியாக மாற்றுவதற்கு உதவும். அதேபோல், அரச - தனியார் கூட்டு முயற்சிகள் மற்றும் அதிநவீன தொழில்நுட்ப முதலீடுகளுக்கும் அடித்தளமாக அமையும்.

அதற்கமைய, இந்தக் கலந்துரையாடலில், நிர்வாக வினைத்திறன், பொருளாதார அபிவிருத்தி மற்றும் உலகளாவிய போட்டித் தன்மைக்காகப் பயன்படுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்திய ஜனாதிபதி, அநுரகுமார திசாநாயக்க, இலங்கையின் டிஜிட்டல் பரிணாம செயன்முறையில் முக்கிய பங்கை வகிக்க முன்வருமாறும் ஒரகல் நிறுவனத்துக்கு அழைப்பு விடுத்தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத், மேல் மாகாண ஆளுநர் ஹனீஸ் யூசுப் உள்ளிட்டவர்களும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

# பிரதமர் ஹரிணி தலைமையில் ஒன்றுகூடியது பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம்

பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தின் எதிர்காலச் செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடும் கூட்டம் பிரதமர் (கலாநிதி) ஹரிணி அமரசூரிய மற்றும் ஒன்றியத்தின் தலைவர் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் ஆகியோரின் இணைத் தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

மாகாண மட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25%ஆக வரும் வகையில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான சந்திப்பதற்கும் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் தீர்மானித்தது.

பணியிடங்களில் பாலியல் வன்முறையை ஒழித்தல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை (SGBV) இல்லாமல் செய்வது போன்ற விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், மார்ச் 08ஆம் திகதி இடம்பெறும் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் திட்டங்கள் தொடர்பிலும் ஒன்றியத்தில் கவனஞ்செலுத்தப்பட்டது.




சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஒன்றியத்தில் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய, எதிர்வரும் தேர்தலில் அந்த முன்மொழிவை செயற்படுத்தும் வகையில் தற்பொழுது காணப்படும் சட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான அவசியம் தொடர்பில் ஒன்றியத்தில் கவனஞ்செலுத்தப்பட்டது.

அத்துடன், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களை நியமிப்பது தொடர்பிலும் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பிலும் கோரிக்கை விடுப்பதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் கட்சிகளின் செயலாளர்களைச்

இக்கூட்டத்தில் ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே ,சமன்மலீ குணசிங்ஹ, பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி சாகரிகா அதாவுத, கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன, ஒஷானி உமங்கா, கிருஷ்ணன் கலைச்செல்வி, சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி, எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி, நிலூஷா லக்மாலி கமகே, சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ, ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே, தீப்தி வாசலகே, சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ, அம்பிகா சாமிவெல் மற்றும் சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஆறு சிங்கக்குட்டிகளுக்கு ரிதியகம சஃபாரி பூங்காவில் பெயரிடும் விழா



ரிதியகமவில் மூன்று மாதம் நிறைவுற்ற ஆறு சிங்கக் குட்டிகளுக்குப் பெயர் சூட்டப்பட்டது.

அம்பலாந்தோட்டை - ரிதியகம சஃபாரி பூங்காவிலேயே மூன்று மாத வயதுடைய ஆறு சிங்கக் குட்டிகளுக்குப் பெயரிடும் விழா நேற்று முன்தினம் (12) நடைபெற்றது.

இந்த ஆறு சிங்கக் குட்டிகளுக்காக 4000 பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டதுடன், அதில்




தெரிவுசெய்யப்பட்ட ஆறு பெயர்களை சூட்டும் நிகழ்வு மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.சி.ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

அதன்படி ஆண் சிங்கத்துக்கு மேக்கா என்றும் பெண்சிங்கங்கள் ஐந்துக்கும் டாரா, ஆக்ரா, பூமி, அகீரா மற்றும் எல்சா எனும் பெயர்களை வைப்பதற்கு மிருகக்காட்சிச் சாலைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

அந்தப் பெயர்களைப் பரிந்துரை செய்தவர்களில் மூன்று பேர் இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன், அவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# ஆயிரம் கிலோ சுக்கு மூடைகளுடன் சந்தேகநபர்கள் மூவர் கற்பிட்டியில் கைது

**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம், கற்பிட்டி - தளுவ பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் கொண்டுசெல்லப்பட்ட ஒருதொகை சுக்கு மூடைகளுடன் சந்தேக நபர்கள் மூவர் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.




வடமேற்கு கடற்படை கட்டளைக்குச் சொந்தமான புத்தளம் - தம்பபன்னி நிறுவன கடற்படையினர் கற்பிட்டி - தளுவ பிரதேசத்தில் விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, சந்தேகத்துக்கிடமான கெப் வாகனமொன்றை கடற்படையினர் சோதனையிட்டனர்.

குறித்த கெப் வாகனத்தில் 32 பொதிகளில் அடைக்கப்பட்ட நிலையில் 1,158 கிலோ 60 கிராம் சுக்கு (உலர்ந்த இஞ்சியும்) 45 கிலோ கிராம் கருவாடும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேக நபர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டனர்.

மேலும், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் புத்தளம் மற்றும் மணல்தோட்டம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட உலர்ந்த இஞ்சி, உலர்ந்த கருவாடு மற்றும் கெப் வாகனம் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

# கத்தியைக் காட்டி ஊழியர்களை மிரட்டிய பாதுகாப்பு அதிகாரி

அரச அச்சகக் கூட்டுத்தாபன ஊழியர்களைப் பாதுகாப்பு அதிகாரி கத்தியைக் காட்டி மிரட்டியதால் நேற்று (13) காலை பதற்றநிலை ஏற்பட்டது.

அரச அச்சகத் கூட்டுத்தாபனத்திலுள்ள சிற்றுண்டிச்சாலையில் உணவு உட்கொள்ள முடியாதெனத் தெரிவித்த ஊழியர்கள், திணைக்களத்தின் வளாகத்திலிருந்து வெளியே செல்ல முற்பட்டுள்ளனர்.

இதன்போது அச்சகத்தின் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி, அவர்களை வெளியே செல்ல அனுமதிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.




அத்துடன், கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் பதற்ற நிலை தோன்றியதாகக் கூறப்படுகிறது.

# யாழ்ப்பாண மாவட்ட செயலாளருக்கும் முதலீட்டாளர்களுக்குமிடையே கலந்துரையாடல்

**(பு.கஜிந்தன்)**

முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலொன்று தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தால் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று (13) காலை 9.00 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.




இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், தேசிய ஒருமைப்பாட்டுக்கான செயலகத் தலைவர் விஜித் ரொஹான் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர்,

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் தொழில் முயற்சியாளர்களின் இடர்பாடுகள் குறித்துக் கலந்துரையாடி தீர்க்கவும் ஆக்கபூர்வமான கருத்துகளைப் பகிர்வதுமே இக்கூட்டத்தின் நோக்கமெனவும் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து ஒழுங்குபடுத்துவதே அரச பணியாளர்களின் நோக்கமாக விருக்கவேண்டுமெனவும் ஒரு கூரையின் கீழ் தீர்க்கும் வகையில் அமைய வேண்டுமெனவும் குறிப்பிட்டு அதற்கான கருத்துகளை முன்வைக்குமாறும் கேட்டுக் கொண்டதுடன், இக்கலந்துரையாடலில் பங்கு பற்றிய பாராளுமன்ற உறுப்பினருக்கும் தேசிய ஒருமைப்பாட்டுச் செயலகத் தலைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் தொடர்புடைய திணைக்களங்களையும் அழைத்து சீரான கால இடைவெளிகளில் கலந்துரையாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், 'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டமானது தனித்து சூழலை மாத்திரம் சுத்தப்படுத்துவது மட்டுமல்ல எனவும், மனங்களிலும் மாற்றம் ஏற்பட வேண்டுமெனவும் முதலீட்டாளர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் எவ்வாறு என்ன அடிப்படையில் உதவிகள் வழங்கலாம் என்று ஆலோசித்து முதலீட்டாளர்களை ஈர்க்கவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சன்துனி ஆரியவன்ச, உதவிப்பணிப்பாளர் சுசந்த குமார, மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், வர்த்தக முகாமைத்துவக் குழுவின் தலைவர், வர்த்தக கைத்தொழிலாளர் சங்கத்தின் தலைவர், முதலீட்டாளர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (13.02.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 182.0365 | 191.2945 |
| கனேடியன் டொலர் | 203.5822 | 212.2567 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.2488 | 41.8002 |
| யூரோ | 302.7372 | 315.1660 |
| ஜப்பான் யென் | 1.8863 | 1.9649 |
| சிங்கப்பூர் டொலர் | 214.7255 | 224.5670 |
| ஸ்ரேலிங் பவுண் | 363.1344 | 377.0065 |
| சுவிஸ் பிராங்க் | 317.6890 | 332.8240 |
| ஐ.அ. டொலர் | 292.6159 | 301.1953 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 787.9488 |
| குவைட் | குவைட் தினார் | 961.5945 |
| ஓமான் | ஓமான் ரியால் | 771.4435 |
| கட்டார் | கட்டார் ரியால் | 81.4683 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 79.1919 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.8650 |

# இடைநிறுத்தப்பட்டுள்ள மத்திய அதிவேக வீதியின் நிர்மாணப்பணிகள் 2 மாதங்களுக்குள் மீள ஆரம்பிப்பு

இடைநிறுத்தப்பட்டுள்ள மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் முதற்கட்ட நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 2 மாதங்களுக்குள் மீள ஆரம்பிக்கப்படுமென போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அதற்கான கடன் தவணைக்கு சீனாவின் எக்ஸிம் வங்கியின் அனுமதியை எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீனாவுக்கான விஜயத்தின்போது இடம்பெற்ற கலந்துரையாடலின் பயனாக குறித்த நிர்மாணப்பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய அதிவேக வீதியின் முதற்கட்டம் கடவத்தை தொடக்கம் மீரிகம வரையில் அமைந்துள்ளது. இது 37 கிலோமீற்றர் நீளம் கொண்டதாகும். இதுவரை 20 வீத நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

மத்திய அதிவேக வீதியின் மூன்றாம் கட்ட நிர்மாணப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக திட்டப் பணிப்பாளர், பொறியியலாளர் அநுராத ஹெட்டியாரச்சி குறிப்பிட்டார்.

2026ஆம் ஆண்டுக்குள் இதனை மக்களிடம் கையளிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். மத்திய அதிவேக வீதியில் பொத்துஹர முதல் கலகெதர வரையான பகுதி மூன்றாம் கட்டத்துக்கு உரித்தானதாகும்.

அதன் நிர்மாணப்பணிகள் உள்நாட்டு பொறியியலாளர்கள் மற்றும் உள்நாட்டு நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் முதற்கட்டமாக பொத்துஹர முதல் இரம்புக்கணை வரையான 13.5 கிலோமீற்றர் நீளமான பகுதி மக்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக அநுராத ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

# இலங்கை பூஞ்சணயியல், தாவர நோயியல் சங்கத்தின் முதலாவது சர்வதேச மாநாடு

**கல்லடி செய்தியாளர்**



இலங்கை பூஞ்சணயியல் மற்றும் தாவர நோயியலுக்கான சங்கத்தின் முதலாவது சர்வதேச மாநாடான 'SLAMPPCon 2025' சனிக்கிழமை (08) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

'பூஞ்சணயியல் மற்றும் தாவர நோயியலில் புதுமைகளின் மூலம் நிலைத்தன்மை' என்ற கருப்பொருளில் மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியில் நடைபெற்ற இம்மாநாட்டில் ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களுக்கு இந்த முக்கிய துறைகளில் முன்னேற்றங்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஒத்துழைப்பை வளர்க்கவும் ஒரு தளத்தை வழங்கும் நோக்கில் இம்மாநாடு இடம் பெற்றது.

சங்கத்தின் தலைவர், கிழக்குப் பல்கலைக்கழக தாவரவியல் துறை பேராசிரியர் திருமதி சந்திரகாந்தா மகேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில், சிறப்புரையை மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர ஆற்றியதுடன், நிகழ்வின் அமர்வில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் அறிவியல் பீடத்தின் தாவர நோயியல் நிபுணரான பேராசிரியர் போல் டபிள்யூ. ஜே. டெய்லர் சிறப்புரையாற்றினார்.

இலங்கையில் தாவர நோயியலின் வரலாறு 1867ஆம் ஆண்டின் கோப்பி தோட்டங்களில் ஏற்பட்ட Coffee rust தொற்றுநோய்க்கு முந்தையது. இந்த நோய் மலையகத்தில் கோப்பி தோட்டங்களை முற்றிலும் அழித்ததுடன், இந்நோய் முதன்முதலில் மடுல்சீமையிலுள்ள ஒரு தோட்டத்தில் ஆரம்பித்து, கோப்பி பயிரிடும் அனைத்துப் பகுதிகளிலும் வேகமாகப் பரவி இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது,

இந்நிலைமை இலங்கையில் தாவர நோயியல் ஆராய்ச்சிக்கு வழிவகுத்ததுடன், வெப்பமண்டல தாவர நோய் ஆய்வுகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது.

இந்நிகழ்வில் சர்வதேசத்தின் பல நாடுகளிலிருந்தும் பல அறிவியலாளர்கள் நிகழ்நிலை ஊடாகவும் மேலும் பல அறிவியலாளர்கள் நேரிலும் பங்கேற்று தமது ஆய்வுகளை முன்வைத்திருந்தனர்.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் ஜீவரெத்தினம் கெனடி உள்ளிட்ட பல கல்வியியலாளர்கள், பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். சுமார் 40 ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு ஆளுநர் செயலகத்தின் நடமாடும் சேவை



**மட்டக்களப்பு**

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையானது மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (13) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் என்பன இணைந்து 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படும் சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை ஆளுநரின் வழிகாட்டுதலின்கீழ் உரிய அதிகாரிகளின் மூலம் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாவட்டத்தின் பல பிரதேசங்களிலிருந்து ஆர்வத்துடன் வருகைதந்த மக்கள் ஆளுநருடன் கலந்துரையாடி தமது தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் (காணி), மாகாணப் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், பணிப்பாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள், காணி, கல்வி, நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி, உள்ளூராட்சி மன்றங்கள், வனஜீவராசி, வனஇலாகா போன்ற திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது ஆளுநரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கு தொழிலற்ற பட்டதாரிகளை நிரப்ப ஆளுநர் நடவடிக்கை

**கனகராசா சரவணன்**



''கிழக்கு மாகாணத்தில் 3,500க்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிதி அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளோம். அவர்கள் அனுமதி தந்த பின்னர் வெற்றிடங்களுக்கு தொழிலற்ற பட்டதாரிகளை போட்டிப் பரீட்சை மூலம் நியமிக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்கான வேலைகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளோம்'' - என கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்

மட்டக்களப்பு பழைய கச்சேரியில் நேற்று வியாழக்கிழமை(13) ஆளுநர் மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது தொழிலற்ற பட்டதாரிகள் சங்கம் அவரைச் சந்தித்து ஜனாதிபதியிடம் அரச நியமனம் கோரிய மகஜரொன்றைக் கையளித்தது.

இதன்போது ஆளுநர், விசேடமாக கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, நாடுபூராகவும் தொழிலற்ற பட்டதாரிகள் இருக்கின்றனர். அதேவேளை, நிதி அமைச்சர் அனுமதியளித்த 375 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கியுள்ளோம். எனவே, கொஞ்சம் கொஞ்சமாக அனைவருக்கும் நியமனங்களை அவசரமாக வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். கோரிக்கையடங்கிய மகஜரை ஜனாதிபதியிடம் கையளிப்போம் என்றார்.

இதேவேளை, ஆளுநரைச் சந்தித்த பின்னர் பட்டதாரிகள் சங்கத் தலைவர் தெரிவிக்கையில், ஆளுநரிடம் பட்டதாரிகளின் கோரிக்கையடங்கிய மகஜரை வழங்கியுள்ளோம் எனவும் அதன்போது கிழக்கில் 3ஆயிரத்து 500 பட்டதாரிகளுக்கு போட்டிப் பரீட்சை நடத்தவுள்ளதாகவும் அதன்மூலம் வேலைவாய்ப்பு வழங்கப்படுமெனவும் ஆளுநர் வாக்குறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.







*மட்டக்களப்பு, தேத்தாத்தீவு வடபத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பாற்குட பவனி வெகு விமரிசையாக நேற்று(13) இடம்பெற்றது. தேத்தாதீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து நடைபவனியாக மேள தாளங்கள் முழங்க, நாதஸ்வரங்கள் ஒலிக்க, பக்தர்களின் அரோகரா கோஷங்களுடன் பாற்குடம் கொண்டுவரப்பட்டு பூஜை நடைபெற்றது.*

குருக்கள்மடம் செய்தியாளர்

# சவூதி மன்னரின் மனிதாபிமான திட்டத்தில் காத்தான்குடியில் இலவச கண் சத்திர சிகிச்சை



**காத்தான்குடி மேலதிக செய்தியாளர்**

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் சவூதி மன்னர் சல்மானின் மனிதாபிமான செயற்றிட்டத்தின் கீழ் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் 500 பேருக்கான இலவச கண் சத்திர சிகிச்சை முகாம் நடைபெற்று வருகிறது.

இலங்கையின் அனைத்து பாகங்களையும் சேர்ந்த மூவின மக்களுக்குமென கடந்த புதன்கிழமை(12) ஆரம்பமான கண் சிகிச்சை முகாம் தொடர்ந்து ஆறு நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

இலங்கை அமிஸ் நிறுவனம் மேற்படி சத்திர சிகிச்சை முகாமை ஏற்பாடு செய்துள்ளதாக அதன் பணிப்பாளர் எம்.எஸ்.எம். தாசிம் தெரிவித்தார். பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஐந்துக்கும் மேற்பட்ட வைத்தியர்கள் குறித்த முகாமில் சத்திர சிகிச்சையை மேற்கொண்டு வருவதுடன் இலங்கை கண் வைத்தியசாலையின் வைத்தியர்களும் குறித்த இலவச கண் சத்திர சிகிச்சை முகாமில் பங்கு கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பமாகியுள்ள இலவச கண் சத்திர சிகிச்சை முகாமில் ஆண்கள் பெண்கள் என பெருமளவிலானவர்கள் தினமும் கண் சத்திர சிகிச்சையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலவச கண் சத்திர சிகிச்சை முகாமுக்கான பூரண வழிகாட்டுதல்களை இலங்கை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சமுர்த்தி சமூக வலுவூட்டல் தொடர்பான தெளிவூட்டல் கலந்துரையாடல்



**செங்கலடி செய்தியாளர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி சமூக வலுவூட்டல் தொடர்பாக மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களைத் தெளிவூட்டும் கலந்துரையாடல் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களாக கந்தசாமி பிரபு, வைத்தியர் இளையதம்பி சிறிநாத், எம்.எஸ்.நளீம், சமுர்த்தி திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் நாயகம் அமிர்தகலாதேவி பாக்கியராஜா, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் சு.ராஜ்பாபு, பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி திணைக்களப் பிரதேச முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சமுர்த்தி சமூக வலுவூட்டல் தேசிய திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து வருடங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இத்திட்டத்தினூடாக வறுமையை ஒழிப்பதற்கு பிரதேச மட்டத்தில் சுயதொழில் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. சமூக வலுவூட்டலை நடைமுறைப்படுத்த வேண்டிய முறைமை பற்றியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் தொடர்பாகவும் தெளிவு படுத்தப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இ.சிறிநாத் கருத்துத் தெரிவிக்கையில், இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப தெளிவூட்டல் காணொளியானது சிங்கள மொழியில் மாத்திரம் ஒளிபரப்பப்பட்டிருந்தது. தமிழ் மொழியில் கட்டாயம் இருந்திருக்க வேண்டும். உத்தியோகத்தர்கள் அனைவரும் விளக்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். எதிர்காலத்தில் தெளிவூட்டல்கள் அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இருக்கவேண்டும். மட்டக்களப்பு சகல வளங்களையும் கொண்டு காணப்படுகின்ற மாவட்டமாக இருந்தாலும் வறுமைக்கோட்டுக்குக்கீழ் வறுமையின் பிடியில் பல குடும்பங்கள் வாழ்வது இன்றுவரை ஒரு பாரிய சவாலாகவே உள்ளது.

போதியளவு வளங்கள் காணப்படுகின்றபோதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்தியடைந்த மாவட்டமாக மாற்ற முடியாத சூழ்நிலையே காணப்படுகிறது. எதிர்காலத்தில் அவற்றை எவ்வாறு நிவர்த்திசெய்து தன்னிறைவு அடைந்ததொரு மாவட்டமாக மட்டக்களப்பை மாற்ற முடியுமென்ற ஒரு செயற்றிட்ட நகர்வையும் முன்னெடுக்க வேண்டும். மக்கள் மத்தியில் நிதி முகாமைத்துவம் சேமிப்பு தொடர்பாக தெளிவூட்டல்கள் பிரதேச - கிராம மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். சமூக வலுவூட்டல் நிகழ்வில் பங்குகொண்ட அரசு அதிகாரிகள், அரசாங்கத் திட்டத்தை மக்களுக்குப் பாகுபாடில்லாமல் சகல மக்களும் பயனடையக்கூடிய வகையிலும் அதனை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும் - என்றார்.





*ஏறாவூர், மிச்நகர் பிரதேசத்தில் ஒரு தசாப்த காலத்தை எட்டி நிற்கும் மஃஹதுல் பரகா பகுதிநேர மத்ரஸாவில் அல்குர்ஆனை பூரணமாக மனனம் செய்த 03 மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை(12) மத்ரஸாவின் அதிபர் எம்.ஆர்.அப்துல் றாபி தலைமையில் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விசேட உரையை பிரதம அதிதியான அகில இலங்கை ஜம்மியதுல் உலமா ஏறாவூர் கிளையின் தலைவரும் மஹாஸினுல் உலூம் அறபுக்கல்லூரியின் அதிபருமான ஏ.எல்.சாஜீத் ஹுசைன் நிகழ்த்தினார்.*

ஏறாவூர் மேலதிக செய்தியாளர்




*லண்டனை மையமாகக்கொண்டு இயங்கும் மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்திச் சங்கம், பட்ஸ் யு.கே. அமைப்பின் இலங்கை மட்டக்களப்பை மையமாகக்கொண்டு இயங்கும் பட்ஸ் பி.கே. என்பன இணைந்து நலிவுற்ற மற்றும் விசேட தேவையுடைய மக்களின் நலன் கருதி நிர்மாணித்த 06 வீட்டுத்திட்டங்களின் இரண்டாம் கட்டமாக நிர்மாணிக்கப்பட்ட 03 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு அமைப்பின் தலைவர் எல்.ஆர்.டேவிட் தலைமையில் புதன்கிழமை (12) இடம்பெற்றது. இதில் அதிதிகளாக அமைப்பின் தலைவர் வைத்திய கலாநிதி ஹெலன் கங்காதரன், மட்டு. மாவட்ட செயலாளர் எஸ்.சசிதரன், அமைப்பின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு அந்தந்த பயனாளிகளிடம் கையளித்தனர்.* (கனகராசா சரவணன்)





*பாவேந்தல் பாலமுனை பாறூக்கின் 'மெட்டுப்போடு' நூல் வெளியீடு பாலமுனை அமீர் மண்டபத்தில் யூ.எல்.ஏ.அஸீஸ் தலைமையில் புதன்கிழமை(12) இடம்பெற்றது. இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கௌரவ அதிதிகளாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கல்முனை எம்.கே.இப்னு அஸார், கணக்காளர் எம்.எப்.பர்ஹான் மற்றும் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனீபா, விரிவுரையாளர் அப்துல் றசாக், கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.*

திராய்க்கேணி செய்தியாளர்

# மாகாண போக்குவரத்து அதிகாரசபைப் பணிப்பாளரும் திட்டமிடல் பணிப்பாளரும் அதிகாரத் துஷ்பிரயோகம்

## தனியார் பஸ்களின் வருமானம் இழக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

(திகாமடுல்ல செய்தியாளர்)

''கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமும் தற்காலிக திட்டமிடல் பணிப்பாளரும் அதிகாரத் துஷ்பிரயோகத்தை மேற்கொண்டு பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர். போக்குவரத்து நேர அட்டவணையொன்று நடைமுறையில் இருக்கும் நிலையில், புதிய அனுமதிப்பத்திரமும் பிரதேசத்துக்குப் பிரதேசம் நீடித்த அனுமதிப்பத்திரமும் வழங்கப்படும்போது, கடமையில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன், தமது வருமானத்தையும் இழக்க நேரிடுகின்றது'' - என தென்கிழக்க்கு கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.பைறூஸ் தெரிவித்தார்.



தென்கிழக்குக் கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் சங்கத்தின் தலைவர் எஸ்.ஐ.எம்.எஸ்.ஏ.மௌலானா தலைமையில் புதன்கிழமை (12) அட்டாளைச்சேனை லொயிட்ஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தென்கிழக்குக் கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட திட்டமிடல் பணிப்பாளரின் பிழையான செயற்பாடுகள் காரணமாகவே பஸ் உரிமையாளர்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதுடன், பலரும் அத்தொழிலைவிட்டு விலகிச்செல்கின்றனர். அத்தோடு கிழக்கு மாகாணத்தில் பெரும் ஊழல், மோசடிகளுக்கும் காரணமாக அமைந்துள்ளனர். முறைகேடாக புதிய போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வழங்குவதுடன், தாம் விரும்பியவாறு அனுமதிப்பத்திரங்களை நீடித்துக்கொடுத்தும் வருகின்றனர். போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள பஸ் உரிமையாளர்களை அழைத்து அவர்களுடன் கலந்தாலோசிக்காமல் இவ்வாறான முறைகேடான செயற்பாடுகளை தொடர்ந்தும் கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினர் மேற்கொண்டு வருகின்றமை மிகக் கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான பிழையான நடைமுறையால் இப்பிராந்திய போக்குவரத்தில் போட்டித்தன்மை ஏற்பட்டு அதிகமான வீதி விபத்துகள் ஏற்படவும் வழிவகுக்கின்றது. போக்குவரத்து நேர அட்டவணையொன்று நடைமுறையில் இருக்கும் நிலையில், புதிய அனுமதிப்பத்திரமும் பிரதேசத்துக்குப் பிரதேசம் நீடித்த அனுமதிப்பத்திரமும் வழங்கப்படும்போது, கடமையில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன், தமது வருமானத்தையும் இழக்கின்றனர்.

இதனால் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு சம்பளத்தைக்கூட வழங்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு பஸ் உரிமையாளர்கள் தள்ளப்படு கின்றனர். கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமும், தற்காலிக திட்டமிடல் பணிப்பாளரும் அதிகாரத் துஷ்பிரயோகத்தை மேற்கொண்ட பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதை நாம் பல ஆதாரங்களுடன் பல தடவைகள் முறையிட்ட போதிலும் அவர்கள் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது புதிரான புதிராகவுள்ளது.

மாகாண ஆளுநரைச் சந்தித்து சகல முறைப்பாடுகளையும் ஆதாரங்களுடன் கையளித்திருக் கின்றோம். நிச்சயம் விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் எம்மிடம் தெரிவித்துள்ளார். ஊழல் மோசடிக்காரர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

வருமானத்தைத் தாண்டி மக்களுக்கான பெரும் சேவையாகக் கருதியே போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம். அதிகாரிகளின் சட்டத்துக்கு முரணான பல விடயங்களை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருக்கின்றோம். அதற்காக எமது சங்கத்தினர் ஒத்துழைப்பு வழங்கியதையிட்டு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எப்போதும் சங்கமாக, அமைப்பாக தொழிற்சங்கமாகச் செயற்படும்போதே எமது உரிமைகளையும் நலன்களையும் வெற்றி கொள்ளலாம். அவ்வாறில்லாதபோது, அதிகாரிகள் எம்மை ஒடுக்கி, அடக்கி அவர்களது அஜந்தாவை எம்மீது திணித்துக்கொள்வர்கள். அந்த வகையில் ஒரு தொழிற்சங்கமாக ஒற்றுமையுடன் நாம் தொடர்ந்தும் பயணிக்க வேண்டும் - என்றார்.

இங்கு சங்கத்தின் பொருளாளர் யூ.எல்.அஸ்வர், உப பொருளாளர் ஏ.எம்.அர்சாட், உப தலைவர் பீ.நவநீதன், உப செயலாளர் டீ.டெனிஸ், மேலதிக ஆலோசகர் ஏ.எம்.இம்றாஸ் ஆகியோரும் கலந்து கொண்டதுடன், அங்கத்தவர்கள் பலரும் தமது கருத்துகளையும் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான கலந்துரையாடல்





(மட்டக்களப்பு)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தலைமையில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் ஏற்பாட்டில் நேற்று(13) பழைய மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இவ்வேலைத்திட்டத்தின் பிரதான மூன்று விடயங்களான சமூக அடிப்படை, சுற்றாடல் அடிப்படை மற்றும் நெறிமுறை அடிப்படையிலான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் மாவட்டச் செயலணியினரின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. மேலும், ஐந்தாண்டு வேலைத்திட்டம் தொடர்பான விரிவான தெளிவூட்டல்களும் இதன்போது வழங்கப்பட்டன.

'வளமான நாடு அழகான தேசம்' எனும் தொனிப்பொருளை அடைவதற்கு அனைத்து திணைக்களங்களும் ஒன்றிணைந்து நடைமுறைப் படுத்தப்படவேண்டிய திட்டம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், முப்படை உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வவுணதீவில் இரு கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகை

## ஒருவர் கைது: 10 பீப்பா கோடா மீட்பு



(கனகராசா சரவணன்)

வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா பெரியகாளைகோட்டைமடு நெல்லிக்காடு ஆற்றுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையங்களை செவ்வாய்க்கிழமை (11) முற்றுகையிட்ட பொலிஸார், ஒருவரை கைது செய்ததுடன், 10 பீப்பாக்கள் கொண்ட கோடாவையும் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.ஐ.சில்வாவின் தலைமையில் சம்பவதினம் பெரியகாளைகோட்டைமடு பகுதியிலுள்ள கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது ஒரு பீப்பா கோடாவுடன் ஒருவரைக் கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து நெல்லிக்காடு கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டபோது அங்கு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் தப்பியோடியதுடன், 10 பீப்பாக்கள்கொண்ட கோடா மீட்கப்பட்டு அழிக்கப்பட்டது. இதன்போது கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கைக்குண்டுகள் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரலக்குளம் மற்றும் அம்பவத்தை பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றும் ஆர்.பி.ஜி. ரக கைக்குண்டு ஒன்றும் புதன்கிழமை (12) மீட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் பிரகாரம் குறித்த இரு பிரதேசங்களின் காட்டையண்டிய பகுதியில் கைவிடப்பட்டிருந்த இரு குண்டுகள் இருப்பதைக் கண்டு பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் இவற்றை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட குண்டுகளை நீதிமன்ற அனுமதியைப் பெற்று செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# பிணை வழங்கப்பட்ட சந்தேகநபர் சுவரேறி குதித்துத் தப்பியோட்டம்

## கல்முனை நீதிமன்ற வளாகத்தில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

நீதிமன்றில் வழக்கு நடைபெற்றவேளை தப்பிச் சென்ற சந்தேக நபரை தேடும் பணியில் கல்முனை தலைமையகப் பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு தொடர்பாக நேற்று(13) அழைத்து வரப்பட்டு விசாரணையின் பின்னர் பிணை வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த சந்தேக நபருக்கு பிணையாளிகளின்மையால் நீதிமன்ற உள்ளக வளாகத்திலுள்ள சிறைக்கூடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவ்வேளை, குறித்த சந்தேக நபர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பி நீதிமன்ற சுவர் மேல் ஏறி குதித்துத் தப்பிச் சென்றதாக நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டில் குறித்த சந்தேக நபர் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தப்பிச்சென்ற சந்தேக நபர் சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், சுமார் 28 வயது மதிக்கத்தக்கவர் என விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

# 02 பவுண் தங்க நகை போதைப்பொருளுடன் சந்தேக நபர் கைது

(பாறுக் ஷிஹான்)

வீடு உடைக்கப்பட்டு 02 பவுண் நகை மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 28 வயது சந்தேக நபரை போதைப்பொருளுடன் சம்மாந்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர்ப் பகுதி வீடொன்று உடைக்கப்பட்டு 02 பவுண் தங்க நகை மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக கடந்த திங்கட்கிழமை (11) சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில், சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜெயலத்தின் ஆலோசனைக்கமைய பொலிஸ் நிலைய பெருங் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு சம்மாந்துறை - 03 ,நெசவாலை வீதி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபரை கைது செய்ததுடன், சந்தேக நபரிடமிருந்து 03 கிராம் 20 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் உட்பட வீடு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட 02 பவுண் நகை மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணம் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், ஏற்கனவே போதைப்பொருளுடன் சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பெருங்குற்றப் பிரிவினரால் கைதான சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை வீடு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட விடயம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் சந்தேக நபர் உட்பட சான்றுப் பொருட்கள் யாவும் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த சம்மாந்துறை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரமழானில் உணவு பாதுகாப்பு திட்டத்தை முன்னெடுத்தல்;கல்முனையில் கலந்துரையாடல்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

ரமழான் நோன்பு காலத்தில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் விசேட உணவுப் பாதுகாப்பு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (11) கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.



கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எஸ்.எப்.இசட்.சஹாராவின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்திய தொழில்சார் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்பு வைத்திய அதிகாரி முஹம்மட் பௌசாட், சாய்ந்தமருது மற்றும் கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன், கல்முனை தெற்கு, கல்முனை வடக்கு மற்றும் சாய்ந்தமருது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்புப் பணியாளர்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது நோன்பு காலத்தில் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் உடனடி உணவுகள், கடைகளில் விற்பனை செய்யப்படும் கஞ்சி வகைகள் போன்றவற்றைப் சோதனை செய்வதுடன், இவ்வுணவக உரிமையாளர்களுக்கு வழிகாட்டுதல் நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

விசேடமாக நோன்பு காலங்களில் சிற்றுணவு வகைகளை விற்பனைசெய்ய விரும்பும் வியாபாரிகள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இவ்வழிகாட்டல் வழங்கப்பட்ட பின்னர் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற மற்றும் உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய நிலையில் உணவுகளைச் சமைத்து விற்பனை செய்யும் உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாகரை புத்தங்கேணி கடலில் கரையொதுங்கிய மிதவை மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ,வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள புத்தங்கேணி கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் போயா என அழைக்கப்படும் பாரிய மிதவை ஒன்றை புதன்கிழமை (12) மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடற்கரையை அண்டிய பகுதியில் பாரிய மிதவையொன்று மிதந்து கரையொதுங்குவதை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் அதனை இழுத்து கரைசேர்த்துள்ளனர்.

அண்மைக்காலமாக இவ்வாறான மிதவைகள் கிழக்கு கடற்கரைகளில் ஒதுங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தூய்மையான சூழலை ஏற்படுத்தும் விழிப்புணர்வு

(தம்பலகாமம் செய்தியாளர்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் கிண்ணியா நகர சபையின் ஏற்பாட்டில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீனற்ற சுற்றுப்புறச் சூழலை உருவாக்கும் நோக்குடன் விழிப்புணர்வூட்டும் நிகழ்வை றகுமானியா நகர் கிராம சேவகர் பிரிவில் நகர சபையின் செயலாளர் எம்.கே.எம்.அனீஸ் தலைமையிலான உத்தியோகத்தர்கள் குழுவினர் புதன்கிழமை (12) முன்னெடுத்தனர்.




கிண்ணியா நகர சபை பிரிவில் உக்காத பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுப் பொருட்களை அகற்றி தூய்மையான சூழலை ஏற்படுத்துவதே இவ்விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகுமென நகர சபை தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வீடாகச் சென்று திண்மக் கழிவகற்றுவதற்கான 150 பைகளும் துண்டுப் பிரசுரங்களும் அறிவுறுத்தல்களும் பொதுமக்களுக்கு இதன்போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிண்ணியா நகர சபையின் செயலாளர், அதன் உத்தியோகத்தர்கள், கிண்ணியா மக்கள் பேரவையின் நிறைவேற்றுச் செயலாளர் எம்.எம்.அப்துல் ஜவாத், நடவடிக்கைச் செயலாளர் எம். றியாஸ், கொள்கைப் பரப்புச் செயலாளர் எம்.எம்.பாயிஸ், சமூக மேம்பாட்டு அமைப்பின் தலைவர் ஏ.யூ.அலாப்தீன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# அநுராதபுரத்தில் பெரும்போக அறுவடையில் 35 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு

## 27 மத்திய நிலையங்களிலிருந்து பெறவும் திட்டம்

**அநுராதபுரம் நிருபர்**

பெரும்போக நெல் அறுவடையின்போது இம்முறை அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளிடமிருந்து 35 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர் நிமல் தென்னகோன் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் நெல் கொள்வனவு செய்தல் சம்பந்தமாக பிரதேச முகாமையாளரைத் தொடர்புகொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளை மையப்படுத்தி இம்முறை 27 நெல் கொள்வனவு செய்யும் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான களஞ்சியசாலை வசதிகளும் அங்கு காணப்படுகின்றன.

மாவட்டத்திலுள்ள அனைத்து நெல் கொள்வனவு மத்திய நிலையங்களும் தற்சமயம் திறக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் மத்திய நிலையங்களுக்கு விவசாயிகளிடமிருந்து நெல் எதுவும் வரவில்லை. அநுராதபுரம் மாவட்டத்தில் நெல் அறுவடை இன்னும் சரியான முறையில் ஆரம்பிக்கப்படவில்லை.

இம்மாதத்தின் இறுதி மற்றும் மார்ச் மாதத்தின் நடுப்பகுதியிலேயே மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நெல் அறுவடை இடம்பெறவுள்ளதுடன், விவசாயிகளிடமிருந்து கொள்வனவுசெய்யும் நெல்லுக்கான நிதியை விவசாயிகளது வங்கிக் கணக்குகளுக்கு அன்றைய தினமே வழங்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர் நிமல் தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

# தரமான கொழுந்து பறிக்க பயிற்சி



**தலவாக்கலை நிருபர்**

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினூடாக பூண்டுலோயா சீன் தோட்டத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தேயிலை கொழுந்து பறிக்கும் தொழிலாளர்களுக்கும் தரத்துக்கேற்ப தேயிலை கொழுந்து பறிப்பது தொடர்பாக பயிற்சிப் பட்டறை பூண்டுலோயா சீன் தோட்டத்தில் நடைபெற்றது.

நடைமுறை மற்றும் தத்துவார்த்தமான இந்தப் பயிற்சித் திட்டத்தில், கொழுந்து பறிக்கும் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்தத் தேவையான அத்தியாவசிய அறிவு மற்றும் நுட்பங்கள் குறித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் கே.ஆர்.டபிள்யூ.பி.கஹந்தவ ,வளவாளர்களாக ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பிரிவின் விரிவாக்க உத்தியோகத்தர் திருமதி ஜீவிகா ராஜேந்திரன் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

# ஊடகவியலாளர் பாரதியின் மறைவு தமிழ்த் தேசியத்துக்குப் பேரிழப்பு!

## சிறீதரன் எம்.பி. இரங்கல்

''மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் மறைவு, ஊடகத்துறைக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் பேரிழப்பு என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஏனெனில், ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது பணியாற்றிய வெகுசில ஊடகவியலாளர்களில் பாரதி என்றும் தனித்துவமானவர்'' - என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் மறைவு குறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஊடக அறம், ஊடக ஒழுக்கம், தற்றுணிவு, தன்மானம் மற்றும் விடாமுயற்சி ஆகிய பண்புகளை ஒருமித்தும் ஒன்றிணைத்தும் கொண்டிருந்த ஒரு பெருந்தகையே மூத்த ஊடகவியலாளர் பாரதி என்றால் அது மிகையாகாது.

கொழும்பில் பணியாற்றுவதற்காகச் சென்ற ஊடகவியலாளர்கள் பலர், தேசிய நீரோட்டத்தில் தொழில்முறையாகச் சங்கமித்து, தமிழ்த் தேசியத்தை விட்டு வெகுதூரம் சென்ற பதிவுகள் எம்மத்தியில் தாராளமாக உள்ளன. ஆனால், ஊடகவியலாளர் பாரதியின் பயணம் வேறுபாடானது. அவர் கொழும்பைத் தளமாகக்கொண்டு செயற்பட ஆரம்பித்தபோதிலும், தமிழ்த் தேசியத்தின்பால் தீராத பற்றும் பேரன்பும் கொண்டிருந்தார். அவரின் வேர் இந்தப் பூமிக்குரியதென்பதால், தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விட்டுக் கிஞ்சித்தும் விலகாமல் நேரிய – சீரிய – செயற்கரிய பணிகளை ஆற்றினார்.

ஒரு கையை இழந்த நிலையிலும், பேனாவை மறுகையாகவும் - மாற்றுக் கையாகவும் உயர்த்தினார். தன்னம்பிக்கையின் முழுவடிவமாக ஊடகப் பரப்பில் வலம் வந்தார். ஊனம் என்பது எதற்கும் தடையல்ல என்பதை வார்த்தைகளால் அல்லாமல் வாழ்வால் நிரூபித்தவர் பாரதி. ஆதலால், அவரின் மறைவை ஊடகப் பரப்புக்கான இழப்பு என்று குறுக்கிவிட முடியாது. உண்மையில், தமிழ்த் தேசியத்துக்கான பேரிழப்பே பாரதியின் மறைவு. அவரை தமிழர் தாயகம் கண்ணீருடன் இன்று அஞ்சலித்து வழியனுப்புகின்றது.

அன்னாருக்கு எம் புகழ் அஞ்சலிகள்!



வரலாற்றுப் பிரசித்திபெற்ற இரத்தினபுரி திருவானக்கட்டை, நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் தைப்பூச தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்றது. மேற்படி ஆலயத்தின் தைப்பூச உற்சவ நிகழ்வில் சர்வமத குருமார்கள் ,சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாந்த பத்மகுமார, நிலுஷா, சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் ஈ.கே.ஏ.சுனீதா உட்பட பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்துகொண்டனர்.

(இரத்தினபுரி நிருபர்)

# மறைந்த மூத்த ஊடகர் இராஜநாயகம் பாரதியின் இறுதிக்கிரியைகள்



மூத்த ஊடகவியலாளர் மறைந்த இராஜநாயகம் பாரதியின் இறுதிக்கிரியைகள் நேற்று (13) யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதன்போது ஊடகர்கள், அரசியல்வாதிகள் என முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

படங்கள் - எஸ். நேசராஜா, ஜீவா சதாசிவம்

www.thamilan.lk
வெள்ளிக்கிழமை, பெப்ரவரி 14, 2025 தமிழன்

# நேட்டோவில் உக்ரைன் இணைவது சாத்தியமில்லை

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



நேட்டோவில் உக்ரைனை இணைப்பது நடைமுறைக்கு உகந்ததல்ல என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் புதன்கிழமை தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைன் மற்றும் ரஷ்ய ஜனாதிபதிகள் விரைவில் நேரில் சந்தித்துப் போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் இந்தச் சந்திப்பானது சவூதி அரேபியாவில் நடைபெற வாய்ப்புள்ளதாகவும் ட்ரம்ப் கூறினார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் புதன்கிழமை ஒன்றரை மணிநேரத்துக்கு மேல் தொலைபேசியில் உரையாடிய ட்ரம்ப், போர் நிறுத்தம் குறித்து விரிவாகப் பேசியுள்ளார்.

அப்போது, உக்ரைனுடன் போர் நிறுத்தப் பேச்சுக்கு புட்டின் ஒப்புக்கொண்டதாகவும் ட்ரம்ப்பை ரஷ்யாவுக்கு அழைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் உள்துறைச் செயலாளர், சி.ஐ.ஏ. இயக்குநர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகரை போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகளை உடனடியாக தொடங்க உத்தரவிட்டுள்ளதாக சமூக வலைத்தளத்தில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து செய்தியாளர்களுடன் பேசிய ட்ரம்ப், போரை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் நேட்டோவில் உக்ரைனை இணைப்பது நடைமுறைக்கு உகந்ததல்ல என்றும் தெரிவித்தார்.

நேட்டோவில் இணைய முயற்சித்ததால்தான் உக்ரைன் மீது ரஷ்யா போரைத் தொடங்கிய நிலையில், ட்ரம்ப்பின் அறிவிப்பு போர் நிறுத்தத்துக்கான வழியை ஏற்படுத்தியுள்ளது.

# மக்களவையில் புதிய வருமான வரி மசோதா



மக்களவையில் புதிய வருமான வரி மசோதாவை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று வியாழக்கிழமை தாக்கல் செய்தார்.

கடந்த 1961-ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம் இயற்றப்பட்டு 60 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டன. இந்தக் காலத்தில் அந்தச் சட்டத்தில் எண்ணற்ற திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திருத்தங்களால் அந்தச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பு அதிக சுமைகொண்டதாகிவிட்டதுடன் அதைப் புரிந்துகொள்வதும் கடினமாகிவிட்டது. அத்துடன் நேரடி வரி நிர்வாகத் திறனிலும் இடையூறு ஏற்பட்டது.

இவற்றைக் கருத்தில் கொண்டு எளிமைப்படுத்தப்பட்ட புதிய வருமான வரி மசோதா மக்களவையில் நேற்று (13) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாநிலங்களவையிலும் இம்மசோதாவை தாக்கல் செய்யவுள்ளார் நிர்மலா சீதாராமன்.

# இலவச மதுபானம், கேளிக்கை விடுமுறைகள் வழங்கி ஊழியர்களை ஈர்க்கும் நிறுவனம்

ஜப்பானைச் சேர்ந்த தொழில்நுட்ப நிறுவனம் புதிய ஊழியர்களை ஈர்க்க இலவச மதுபானம் மற்றும் கேளிக்கை விடுமுறைகள் வழங்கும் புதுமையான திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

அந்நாட்டின் ஒசாகா மாகாணத்தைச் சேர்ந்த சிறிய தொழில்நுட்ப நிறுவனமான 'டிரஸ்ட் ரிங்' மற்ற பெரிய நிறுவனங்களைப் போல் அதிக சம்பளம் மற்றும் ஊதியப் பயன்களை வழங்காமல், அதன் ஊழியர்களுக்குப் பணி நேரத்தில் இலவசமாக மதுபானம் வழங்கி வருகின்றது. மேலும், அந்த மதுபானத்தின் போதையால் அவர்கள் சோர்வடைந்தால் ஓய்வு எடுக்க அதிகளவில் கேளிக்கை விடுமுறைகளையும் வழங்கி வருகின்றது.

இந்தத் திட்டம் அங்கு புதிதாக பணியில் சேருவோரை அதிகளவில் ஈர்த்துள்ளதாகக் கூறப்படும் நிலையில், பிற நிறுவனங்களைப் போல புதிய ஊழியர்களுக்கு அதிக சம்பளம் வழங்க முடியாததால், இத்தகையதொரு திட்டத்தை வகுத்ததாகவும் சம்பளத்தை விட இதுபோன்ற சலுகைகளை ஊழியர்கள் அதிகளவில் விரும்புகிறார்களென்றும் அந்நிறுவனத்தின் செயல் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அவரது நிறுவனத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியமே 2,22,000 யென் (ரூ.1.27 இலட்சம்) என்பதால் அதற்கு மேல் வழங்க முடியாத தங்களைப்போன்ற புதிய நிறுவனங்கள் இதுபோன்ற புதுமையான திட்டங்களை வகுத்து ஊழியர்களை ஈர்க்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, ஜப்பான் நாட்டு நிறுவனங்கள் பெரும்பாலும் வழக்கமான அலுவலக மரபுகளைப் பின்பற்றுவதைவிட ஊழியர்களுக்குப் பிடித்தமான அலுவலக முறைகளையும் சூழலையும் உருவாக்குவதில் ஆர்வங்காட்டி வருகின்றன.

ஊழியர்கள் பணிநேரத்தில் உறங்குவதைப் பெரும்பாலான நாடுகள் சோம்பேறித்தனமாகக் கருதி வரும் நிலையில், ஜப்பான் நாட்டு நிறுவனங்கள் 'இன்யெமுறி' என்றழைக்கப்படும் பணியிடங்களில் பணியாளர்கள் உறங்கும் முறையை ஊக்குவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் பனிமூட்டம்:

# விமானம், மின்சார ரயில் சேவை பாதிப்பு!



சென்னை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கடும் பனிமூட்டம் நிலவியதால் விமானம் மற்றும் மின்சார ரயில் சேவையில் நேற்று வியாழக்கிழமை பாதிப்பு ஏற்பட்டது.

சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பனியின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் சென்னை விமான நிலையத்திலிருந்து இயக்கப்படும் விமான சேவைகள் காலை நேரங்களில் சில நாட்களாக தாமதமாக இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று சிங்கப்பூர், டுபாய், அபுதாபி, மஸ்கட், கொல்கத்தா உள்ளிட்ட பகுதிகளுக்குப் புறப்படும் 10 விமானங்களும் மஸ்கட், சிங்கப்பூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வரும் 4 விமானங்களின் சேவையும் பாதிக்கப்பட்டன.

சுமார் ஒரு மணிநேரம் வரை தாமதமாக விமானம் இயக்கப்படுவதால் பயணிகள் மிகவும் சிரமத்துக்குள்ளாகினர்.

அதேபோல் செங்கல்பட்டு பகுதிகளில் கடும் பனிமூட்டம் நிலவுவதால் அங்கிருந்து சென்னைக்கு இயக்கப்படும் மின்சார ரயில்கள் 15 நிமிடங்கள் தாமதமாக இயக்கப்படுகின்றன.

வீதி சமிக்ஞை சரியாக தெரியாததால் பாதுகாப்புக் கருதி ரயில்கள் மிதமான வேகத்தில் இயக்கப்பட்டு வருவதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இழந்த பகுதிகள் உக்ரைனுக்கு கிடைக்காது!

## அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்செத்



''ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை உக்ரைன் இனி திரும்பப் பெற முடியாதென்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' - என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்செத் கூறியுள்ளார்.

பிரஸ்ஸெல்ஸில் புதன்கிழமை நடைபெற்ற உக்ரைன் ஆதரவு நாடுகளின் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு இனியும் முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில் அமெரிக்கா தற்போது இல்லை. தற்போதைய நிலையில், உள்நாட்டுப் பாதுகாப்பிலும் சீன அச்சுறுத்தலை எதிர்கொள்வதிலும் மட்டுமே அமெரிக்கா கவனம் செலுத்துகிறது. எனவே, ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் இராணுவத்துக்கு ஆதரவளிப்பதில் ஐரோப்பிய நாடுகள்தான் இனி முன்னிலை வகிக்க வேண்டும். மேலும், நேட்டோ இராணுவக் கூட்டமைப்புக்கான நிதியுதவியை ஐரோப்பிய நாடுகள் அதிகரிக்க வேண்டும்.

அந்தக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய பிராந்தியத்தைச் சேர்ந்த உறுப்பு நாடுகள் தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 5 சதவீதத்தைச் செலவழிக்க வேண்டும். உக்ரைனைப் பொறுத்தவரை அங்கு போரை நிறுத்தி நிரந்தர அமைதியை எட்ட வேண்டும் என்பதுதான் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் நிலைப்பாடாகவுள்ளது.

அத்தகைய அமைதி ஏற்படவேண்டுமென்றால் ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை இனி திரும்பப் பெற முடியாதென்பதை உக்ரைன் ஏற்றுக்கொண்டாக வேண்டும். உக்ரைன் எல்லைகளை 2014க்கு முன்பு (கிரீமியாவை ரஷ்யா இணைத்துக்கொண்ட ஆண்டு) இருந்த நிலைக்கு மாற்ற முடியாதென்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்வதுதான் அந்த நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுவதற்கான தொடக்கப் புள்ளியாக இருக்கும். ஒரு மாயையான இலக்கை (ரஷ்ய ஆக்கிரமிப்புப் பகுதிகளை மீட்பது) நோக்கி தொடர்ந்து பயணித்துக்கொண்டிருப்பது போரை நீண்ட நாட்களுக்கு இழுத்தடித்து இன்னும் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தும்'' - என்றார்.

கடந்த நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த மாதம் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதாக சூளுரைத்திருந்தார். இருந்தாலும் அதற்கான செயற்றிட்டம் எதையும் அவர் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

இந்தச் சூழலில் பிரித்தானிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோன் ஹீலியின் தலைமையில் நடைபெற்ற உக்ரைன் ஆதரவு மாநாட்டில் பீட் ஹெக்செத் இவ்வாறு கூறியுள்ளதால் ட்ரம்ப்பின் அமைதித் திட்டத்தில் ரஷ்யாவிடம் இழந்த பகுதிகளை உக்ரைன் விட்டுத்தர வேண்டும்; அவற்றை ரஷ்ய பகுதிகளாக ஏற்கவேண்டும் என்ற அம்சம் இடம்பெற்றிருக்கும் என்று கருதப்படுகிறது.

# வரி விதிப்பு, நாடு கடத்தல் விவகாரங்களை ட்ரம்ப்பிடம் பிரதமர் மோடி பேச வேண்டும்

## காங்கிரஸ் தேசிய தலைவர் கார்கே வலியுறுத்து



''அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் வரி விதிப்பு அச்சுறுத்தல் மற்றும் இந்தியர்களை விலங்கிட்டு நாடு கடத்திய விவகாரத்தைப் பிரதமர் நரேந்திர மோடி பேச வேண்டும்'' - என்று காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பதவியேற்ற பிறகு பல்வேறு நாடுகளுக்கு எதிராக சில கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். முக்கியமாக சில குறிப்பிட்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிகபட்ச வரி விதிப்பது, அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறிய வெளிநாட்டவர்களைத் திருப்பியனுப்புவது ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். இதன் ஒரு பகுதியாக அமெரிக்க இராணுவ விமானம் மூலம் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில், 104 இந்தியர்கள் தாய்நாட்டுக்கு அண்மையில் நாடு கடத்தப்பட்டனர்.

இந்நிலையில் அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பிடம் இது தொடர்பில் எடுத்துரைக்க வேண்டும்.

இந்நிலையில், இது தொடர்பாக காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே 'எக்ஸ்' வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில், ''அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை பிரதமர் நரேந்திர மோடி சந்திக்கும்போது வரி விதிப்பு அச்சுறுத்தல் மற்றும் இந்தியர்களை விலங்கிட்டு நாடு கடத்திய விவகாரத்தை பேச வேண்டும்.

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அலுமினியம், இரும்புப் பொருட்கள் மீது 25 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இதில் எந்த நாட்டுக்கும் சலுகை கிடையாதென அமெரிக்கா கூறுகிறது. இது இந்திய உற்பத்தியாளர்களுக்கு வெகுவாகப் பாதிப்பை ஏற்படுத்தும். அந்நாட்டு ஜனாதிபதியுடன் உரிய முறையில் பேச்சு நடத்தி இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்.

அதேபோல் அமெரிக்காவிலிருந்து இந்தியர்களை கை, கால்களில் விலங்கிடப்பட்டு அனுப்பி வைத்தது பெரும் வருத்தத்தையளித்தது. எனவே, எதிர்வரும் காலத்தில் இதுபோன்ற செயற்பாடுகளில் மனிதாபிமான அடிப்படையில் நடந்துகொள்ள வேண்டுமென ட்ரம்ப்பிடம் பிரதமர் மோடி வலியுறுத்த வேண்டும்'' - என்று பதிவிட்டுள்ளார்.

# அமெரிக்கா சென்றார் பிரதமர் மோடி



இந்தியப் பிரதமர் மோடி நேற்று வியாழக்கிழமை அமெரிக்காவை சென்றடைந்தார்.

அமெரிக்காவுக்கு இரண்டு நாட்கள் அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தொடர்ந்து பிரதமர் மோடி ஸ்டார்லிங்க்கின் தலைவர் எலான் மஸ்க்கையும் சந்திக்க வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்றார்.

ட்ரம்ப் நிர்வாகம் பதவியேற்ற சில வாரங்களில் அமெரிக்காவுக்குச் செல்லும் 4ஆவது வெளிநாட்டுத் தலைவர் இந்தியப் பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒதியமலையில் மக்கள் குறைகேள் சந்திப்பை நடத்தினார் ரவிகரன் எம்.பி.

## மக்களால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைப்பு



விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஒதியமலைக் கிராமத்தில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை அண்மையில் நடத்தினார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இந்த மக்கள் குறைகேள் சந்திப்பில் விவசாய வீதிகளைச் சீரமைத்தல், விவசாயக் கிணறுகளைச் சீரமைத்தல், குளங்களின் சீரமைப்பு, வாய்க்கால் சீரமைப்பு, கால்நடைகளுக்கான மேய்ச்சல்தரவைகளைப் பெற்றுக்கொடுத்தல், யானைவேலி அமைத்தல், அணைக்கட்டுகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் ஒதியமலைக் கிராம மக்களால் முன்வைக்கப்பட்டன.

இதன்போது வனவளத் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ள கருவேப்பமுறிப்புக்குளத்தின் கீழான மக்களின் வயல்நிலங்களையும் பாரிய நிதிச்செலவில் சீரமைக்கப்பட்டும் பயன்பாடில்லாமல் காணப்படும் கருவேப்பமுறிப்புக்குளத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

குறித்த விவசாயக் காணிகளை விடுவித்துத் தருமாறு அப்பகுதி மக்களால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக, கடந்த 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ஆம் திகதி ஒதியமலைக் கிராம மக்கள் பலர் இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்டதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுவதுடன், தற்போதும் ஒவ்வொரு ஆண்டும் அவ்வாறு படுகொலைசெய்யப்பட்ட கிராம மக்களுக்கு டிசம்பர் 02ஆம் திகதியில் அஞ்சலி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறித்த படுகொலைச் சம்பவத்துக்குப் பிற்பாடு அங்கிருந்த தமிழ் மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து நீண்டகாலத்துக்குப் பின்னரே தமது பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறு அவர்கள் இடம்பெயர்வுக்கு முன் விவசாயம் மேற்கொண்ட காணிகள் அனைத்தும் தற்போது பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

இம்மக்களின் விவசாயக் காணிகளை வனவளத் திணைக்களம் தமது பகுதிகள் எனக்கூறி தற்போது அபகரித்துள்ளது. சுமார் 110 ஏக்கருக்கும் மேற்பட்ட மக்களின் வயல் காணிகளே இவ்வாறு வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த பகுதியானது மக்கள் தமது விவசாய நிலங்களைத் துப்புரவுசெய்து விவசாயம் மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இதனையடுத்து மக்களிடம் மகஜர்களையும் பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் , மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து தம்மால் கவனஞ்செலுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

# தலைமைத்துவ பண்பை சிறுவர்களிடத்தில் வளர்க்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர்



நெல்லியடி நிருபர்

''எமது சமூகம் முன்னர் எவ்வாறு கட்டுக்கோப்புடன் வாழ்ந்ததோ அதேபோன்றதொரு நிலைமை எதிர்காலத்தில் உருவாக்க இப்போதே அடித்தளமிட வேண்டும். இதற்கு எமது சமூகத்தின் மாற்றத்துக்கான விதையை முன்பள்ளிக் குழந்தைகளிடம் விதைக்கவேண்டும். அவர்களுக்கு ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதுவே எமது சமூகம் கட்டுக்கோப்புடன் வாழும் நிலைமையை எதிர்காலத்தில் உருவாக்கும்'' என வடக்கு மாகாண ஆளுநர் கூறினார்.

தெல்லிப்பழை மழலைகள் பூங்காவின் 'மலரும் மழலைகள்' நூல் வெளியீட்டு நிகழ்வு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (12) புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''நாங்கள் சிறுபராயத்தில் இருந்த நிலைமைக்கும் தற்போதுள்ள நிலைமைக்குமிடையில் பாரிய வேறுபாடு இருக்கின்றது. இன்றைய சமூகம் சுயநலமிக்கதாக மாறிவிட்டது. எனவே, சிறுவயதிலிருந்தே நல்ல பழக்கவழக்கங்களைப் பிள்ளைகளுக்கு பழக்கவேண்டும்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை என்னைச் சந்தித்தனர். அந்தக் குழுவிலிருந்த ஒருவர், தங்கள் நாட்டில் முன்பள்ளிப் பருவத்திலிருந்தே வகுப்பறைகளைச் சுத்தம் செய்வது, மலசலகூடங்களைச் சுத்தம் செய்வது என அனைத்தையும் பிள்ளைகளைக்கொண்டே செய்விக்கின்றோம். எதிர்காலத்தில் அவர்கள் வளர்ந்து பெரியவர்களான பின்பும் அவர்களே தங்கள் இடங்களைத் துப்புரவாக வைத்திருப்பார்கள் எனச் சொன்னார்.

அது உண்மை. நாம் இங்கு அவ்வாறான பழக்கவழக்கங்களைப் பழக்குவதில்லை. இதனால்தானோ என்னவோ, வீதிகளில் இரவு நேரத்தில் கொண்டு வந்து குப்பைகளைப்போட்டு விட்டுச் செல்கின்றார்கள்.

கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் தூய்மைப்படுத்தும் பணிகளை நாங்கள் முன்னெடுத்து முதல் நாளில் குப்பைகளைத் துப்புரவு செய்தாலும் மறுநாள் மீண்டும் குப்பைகளைக் கொண்டுவந்து போடுகின்றார்கள். இந்த மனநிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். அதனால்தான் முன்பள்ளிப் பருவத்திலிருந்தே சரியான பழக்கவழக்கங்களைச் சொல்லிக்கொடுக்கச் சொல்கின்றேன்.

இன்று ஆலயங்களை நிர்மாணிக்கின்றார்கள். ஆனால், ஆலயங்களை வழிபடுவதற்கு ஆட்கள் இல்லை. வழக்குகளுக்கு வாதாடுவதற்கு மாத்திரம் ஆட்கள் இருக்கின்றார்கள். இந்த மாற்றங்கள் ஏன் ஏற்பட்டன? அதனால்தான் சிறுவயதிலிருந்தே சரியான எண்ணங்களைப் பிள்ளைகளிடத்தில் விதைத்து எதிர்கால சமூகத்தைச் சரியான வழியில் கட்டியெழுப்பவேண்டும்.

பொலிஸ் நிலையங்களுக்குச் சென்றால் நீதி நிலைநாட்டப்படுமென மக்கள் முழுமையாக நம்பவேண்டும். செல்வாக்குள்ளவர்கள், பணவசதியுடையவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பார்கள் என்ற மக்களின் எண்ணங்கள் மாறும் வகையில் பொலிஸ் திணைக்களமும் நடந்துகொள்ளவேண்டும்.

இந்த மாற்றங்களுக்கு அடிகோலுவதாக பிள்ளைகளுக்கு சரியான ஒழுக்கநெறியைப்போதிக்கவேண்டும். நல்ல தலைமைத்துவப்பண்பை பிள்ளைகளிடத்தே வளர்க்கவேண்டும். எதிர்காலத்தில் மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மிகச் சிறந்த தலைவர்களை உருவாக்கவேண்டும்'' – என்றார்.

# இடமாற்றம்



பு.கஜிந்தன்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அமரசிங்க குருநாகலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.மூன்று வருடங்களுக்கும் மேலாக மருதங்கேணி பிரதேசத்தில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த வேளையிலேயே இவ்வாறு அவர் நேற்று (13) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மருதங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

# சமூக மாற்றத்துக்கான ஊடக மையம் வடமராட்சி கிழக்கில் திறந்துவைப்பு!




பு.கஜிந்தன்

சமூக மாற்றத்துக்கான ஊடக மையத்தின் அலுவலகத் திறப்பு விழா நேற்று முன்தினம் (12) மருதங்கேணி, தாளையடி பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் சி.த.காண்டீபனின் தலைமையில் காலை 10.00 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசியல் ஆய்வாளர், சட்டத்தரணி, யாழ். பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர், சமூக விஞ்ஞான ஆய்வுமைய இயக்குநர் சி.அ.ஜோதிலிங்கம் கலந்துகொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

சமூக மாற்றத்துக்கான ஊடக மையம் அனைத்து ஊடகவியலாளர்களையும் உள்ளடக்கி சர்வதேச ரீதியில் செயற்படவுள்ளது.

இந்நிகழ்வில் மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அமரசிங்க, ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாசத் தலைவர், வடமராட்சி கிழக்கு தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர், தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளர், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் சுரேஸ்குமார், வடக்கு மாகாண காணி உரிமைக்கான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளரும் யாழ். மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத் தலைவருமான முரளிதரன், கவிஞர் யாழ். மருதன், பிரதேச வர்த்தகர்கள், வத்திராயன் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# அமிர்தலிங்கத்தின் உருவச்சிலையும் நினைவில்லமும் திறந்துவைப்பு



பு.கஜிந்தன்

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உருவச்சிலை திறப்பும் அமிர்தலிங்கம் - மங்கையற்கரசி நினைவில்லத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று முன்தினம் (12) மூளாயிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் தலைமையில இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் சாய் முரளி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வட மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உட்பட அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வரவேற்புரையை அன்னாரது புதல்வர் அமிர்தலிங்கம் பகீரதன் நிகழ்த்தினார். அமிர்தலிங்கத்தின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரது உருவச்சிலையை வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் திறந்து வைத்தார்.

அமிர்தலிங்கம் - மங்கையற்கரசி நினைவு இல்லத்தை இந்திய துணைத் தூதர் சாய் முரளி திரைநீக்கம் செய்துவைத்தார். இந்த நினைவில்லத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் பயன்படுத்திய பொருட்கள் அவரது அரசியல் வரலாற்றுப் பயணத்தை நினைவுபடுத்தும் புகைப்படங்கள் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# கைவிடப்பட்ட நிலையில் கிடக்கும் கடுகண்ணாவை ரயில் அருங்காட்சியகம்





ஜே.எம்.ஹாபீஸ்

கடுகண்ணாவை ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள ரயில் அருங்காட்சியகம் தற்போது கவனிப்பாரற்றுக் காணப்படுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகள் அதனைப் பார்வையிடக் கூடிய சூழல் இல்லையெனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேற்படி ரயில் அருங்காட்சியகத்தில் இலங்கையில் முதலாவதாக சேவையில் அமர்த்தப்பட்ட ரயில் என்ஜின், அதே போன்று பழைய ரயில் பெட்டி உட்பட பல்வேறு அம்சங்கள் ஞாபகார்த்தமாக இதில் வைக்கப்பட்டுள்ளன. இதனை இலங்கை ரயில்வே திணைக்களமே நிர்வகித்து வந்தது.

இது தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்காது போனால் மிகக் குறுகிய காலத்தில் மேற்படி அருங்காட்சியக உபகரணங்கள் பழைய இரும்புக் கடைக்கு விற்கவேண்டிய நிலை ஏற்படுமெனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை விரைவில் புனரமைப்புச் செய்தால் சுற்றுலாத் துறையினருக்கு காட்சிப்படுத்த முடிவதுடன் கணிசமான வருமானத்தையும் ஈட்டிக்கொள்ளலாமென பொதுமக்கள் ஆலோசனை கூறுகின்றனர்.





***தலவாக்கலை மேல் கொத்மலை வர்த்தக நிலையத்தில் நிறுவப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் பொது ஒருங்கிணைப்பு அலுவலகம் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆரச்சி தலைமையில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உள்ளூர் செயற்பாட்டாளர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (படங்கள்:தலவாக்கலை நிருபர்)***

# செக்டா மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி நிலையத்தின் விளையாட்டுப் போட்டி









பானகமுவ நிருபர்

செக்டா மாற்றுத் திறனாளிகளுக்கான கல்வி நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி ஹிஜ்ராகம விசேட தேவையுடைய கல்வி நிலையத்தின் இயக்குநர் எம். ஜே. எம். நயீமுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக செக்டா மாற்றுத் திறனாளிகள் நிலையத்தின் ஆளுநர் தேசபந்து ஹாபிஸ் எம். எச். ரிஸ்வான் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அதிபர் எம். ஐ. எம். முனீர், செயலாளர் முஹாஜிரின், முகாமையாளர். எச். எம். உசாமா, ஹெம்மாத்தகம பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி நிஸாம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அஸாம், ஹெம்மாத்தகம பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர். இதன்போது போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு அதிதிகளினால் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# உக்குவளையில் கலந்துரையாடல்

உக்குவளை நிருபர்

உக்குவளை வாசிப்போர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பிரதேச கலைஞர்கள் எழுத்தாளர்களுடனான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 25 ஆம் திகதி உக்குவளையில் அமைந்துள்ள ஒன்றிய காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது கலைஞர்கள், எழுத்தாளர்கள் தம் துறைகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அவர்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

# தெஹியங்க - வத்துரகும்புர பாதையை புனரமைக்க கோரிக்கை

ஜே.எம்.ஹாபீஸ்

தெஹியங்க - வத்துரகும்புர பாதை நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது சேதமடைந்து காணப்படுவதால் அவ்வீதியூடாக போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கண்டியிலிருந்து கிரிபத்தகும்புர ஊடாக வத்துரகும்புர, தெஹியங்க, வெவதென்ன, ஹெரபிட்டிய உட்பட 25 கிராமங்களுக்கு இப்பாதையூடாகவே மக்கள் பயணம் செய்கின்றனர்.

ஆனால், கடந்த 25 வருடங்களுக்கு மேல் இப்பாதை புனரமைக்கப்படாது சேதமடைந்து காணப்படுவதால் இப்பாதையூடாக போக்குவரத்துச் செய்வதில் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே, மேற்படி வீதியைப் புனரமைக்க சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# 1992இன் பின் ஆஸி. யுடன் அடுத்தடுத்து இரு தொடர்களை கைப்பற்றுமா இலங்கை?

## இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று

(அகீல் சிஹாப்)

சுற்றுலா அவுஸ்திரேலியா அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டி இன்று காலை 10.00 மணிக்கு கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இலங்கைக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸி. அணி இலங்கை கிரிக்கெட் அணியுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் இரு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுகிறது. முன்னதாக நடைபெற்ற ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் டெஸ்ட் தொடரை ஆஸி. அணி 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி 13 ஆண்டுகளின் பின் இலங்கை மண்ணில் டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்தது.



அதன் பின் இரு அணிகளுக் கிடையிலான ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 46 ஓவர்களில் சகல விக்கெட் களையும் இழந்து 214 ஓட்டங் களைப் பெற்றது.

215 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆஸி. அணி 165 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. இந்நிலையில் இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகிறது.

இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இறுதியாக 2022 நவம்பரில் 5 போட்டிகள் இருதரப்பு ஒருநாள் சர்வதேச தொடர் நடைபெற்றது. இந்த தொடரை இலங்கை அணி 3-2 என்ற அடிப்படையில் கைப்பற்றி சாதனை படைத்தது. இந்நிலையில் இன்று நடைபெறும் இரண்டாவது போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றால் 1992ஆம் ஆண்டின் பின் அவுஸ்திரேலிய அணியுடன் அடுத்தடுத்து இருதரப்பு தொடர்களை கைப்பற்றிய சாதனையை பதிவுசெய்யும்.

இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையில் இதுவரையில் 8 இருதரப்பு ஒருநாள் சர்வதேச தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் 4 தொடர்களை இலங்கை அணி வென்றுள்ள நிலையில், ஆஸி. அணி 3 தொடர்களை மாத்திரம் வென்றுள்ளது. கடந்த 2012இல் நடைபெற்ற தொடர் சமநிலையில் நிறைவடைந்தது. எனவே இலங்கை அணி 2-0 என்ற அடிப்படையில் ஒருநாள் தொடரை வெற்றிகொண்டு ஆஸி. அணியுடன் 5வது இருதரப்பு ஒருநாள் தொடரை வெல்லுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.



# இறுதிப்போட்டியில் பாக். – நியூசிலாந்து அணிகள் இன்று மோதல்

நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகள் பங்கேற்றுள்ள முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இன்றைய தினம் நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் குறித்த தொடரில் நியூசிலாந்து தனது முதல் 2 ஆட்டங்களில் முறையே பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்காவை வீழ்த்தி முதல் அணியாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இந்நிலையில், இறுதிப்போட்டிக்கு முன்னேறும் 2வது அணி எது என்பதை தீர்மானிக்கும் கடைசி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகள் நேற்று முன்தினம் கராச்சியில் மோதின.

இந்த ஆட்டத்தில் 353 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணியில் தலைவர் முஹமட் றிஸ்வான் - சல்மான் அகா ஜோடி 260 ஓட்டங்களை குவிக்க பாக். அணி 49 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்த நிலையில் வெற்றியிலக்கை அடைந்து இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

# பங்களாதேஷ் வீராங்கனைக்கு ஐந்து ஆண்டுகள் தடை விதித்த ஐ.சி.சி



பங்களாதேஷ் கிரிக்கெட் அணி வீராங்கனை ஷோலே அக்தருக்கு ஐ.சி.சியினால் ஐந்து வருட தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு நடைபெற்ற மகளிர் ரி20 உலகக்கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் பங்களாதேஷ் வீராங்கனை ஒருவரிடம் பிக்சிங் செய்வது குறித்து பேஸ்புக் வழியாக பேசியுள்ளார். ஹிட் அவுட் ஆனால், குறிப்பிட்ட தொகை பணம் தருவதாக ஆசை காட்டினார்.

இதை அந்த வீராங்கனை, உடனடியாக ஐ.சி.சியின் ஊழல் தடுப்பு குழுவிடம் தெரிவித்தார். இதுகுறித்து ஐ.சி.சி. விசாரித்தது. முடிவில், போட்டியில் பிக்சிங் செய்ய முயன்றது, இதுகுறித்த விபரங்களை தெரிவிக்க மறுத்தது போன்ற காரணங்களுக்காக கிரிக்கெட் தொடர்பான செயல்களில் ஈடுபட ஷோலேவுக்கு 5 ஆண்டு தடை விதித்தது.

ஷோலே பிக்சிங் தொடர்பாக தடை விதிக்கப்பட்ட முதல் சர்வதேச வீராங்கனை ஆனார். 36 வயதான இவர் பங்களாதேஷ் அணிக்காக இதுவரை 2 ஒருநாள், 13 சர்வதேச ரி-20 போட்டிகளில் பங்கேற்றுள்ளார். கடைசியாக 2022, ஒக்டோபரில் இலங்கைக்கு எதிரான ரி-20 போட்டியில் விளையாடினார்.



# ஆர்.சி.பி அணியின் புதிய தலைவராக படிதார் நியமனம்

இந்தாண்டு நடைபெறவுள்ள இந்தியன் ப்ரீமியர் லீக் தொடருக்கான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் புதிய தலைவராக இளம் துடுப்பாட்ட வீரர் ரஜத் படிதார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த முறை ஃபாப் டு பிளெஸ்ஸி அணியின் தலைவராக செயற்பட்டார். அதற்கு முன்னதாக விராட் கோலி அணியை வழிநடத்தி வந்தார். இந்நிலையில் இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது. பயிற்சியாளராக தினேஷ் கார்த்திக் தேர்வாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வை அறிவித்த பிரேசில் உதைபந்து வீரர்



பிரேசிலின் முன்னணி உதைபந்து வீரரும் ரியல் மாட்ரிட் கிளப்புக்காக ஆடியவருமான மார்செலோ (வயது 36) உதைபந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இவர் பிரேசில் அணிக்காக 58 சர்வதேச போட்டிகளில் ஆடி அதில் 6 கோல்கள் அடித்துள்ளார்.


2007-ஆம் ஆண்டு ஸ்பெயினில் உள்ள ரியல்மாட்ரிட் கிளப்பில் இணைந்த அவர் 16 சீசன்கள் விளையாடி உள்ளார். அந்த கிளப்புக்காக 6 முறை லா லிகா சம்பியன் கிண்ணம் மற்றும் 5 முறை சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்றதில் முக்கிய பங்கு வகித்துள்ளார். அந்த அணியின் தலைவராகவும் பணியாற்றி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத் துளிகள்

★ சென்னையில் நடைபெற்ற சென்னை ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் பிரான்சின் கிரியான் ஜாக்குயட், சுவீடனின் எலியாஸ் யமெரை எதிர்கொண்டார். இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கிரியான் ஜாக்குயட் முதல் இரு செட்டுகளையும் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்றார்.

★ நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் 7 ஆயிரம் ரன்களை அதிவேகமாக எட்டிய 2வது வீரர் என்ற சிறப்பை பெற்றார். 167 ஆட்டங்களில் பங்கேற்றுள்ள வில்லியம்சன் அதில் 159 இன்னிங்சில் 14 சதம், 46 அரைச்சதம் உட்பட 7,001 ரன்கள் சேர்த்துள்ளார். தென்னாபிரிக்காவின் அம்லா 150 இன்னிங்சில் இந்த மைல்கல்லை எட்டியதே அதிவேக சாதனையாக தொடருகிறது. மேலும் 7 ஆயிரம் ரன்களை கடந்த 5-வது நியூசிலாந்து வீரராகவும் சாதனை வரிசையில் வில்லியம்சன் இணைந்தார்.

# ஜாம்பவான் ரொனால்டோவுக்கு 12 அடி உயர வெண்கல சிலை



அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்திலுள்ள டைம்ஸ் ஸ்கொயரில் உதைபந்து ஜாம்பவான் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் 40வது பிறந்த நாளை முன்னிட்டு அமைக்கப்பட்ட அவரது 12 அடி உயர வெண்கல சிலை அண்மையில் அவரது ரசிகர்களால் திறந்து வைக்கப்பட்டது.

போட்டியில் கோல் அடித்த பின்னர் அதனை கொண்டாடும் விதமாக ரொனால்டோ பின்பற்றி வரும் சியூ எனும் செய்கையை குறிப்பது போல் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த சிலையை இத்தாலிய கலைஞரான செர்ஜியோ ஃபுர்னாரி என்பவர் உருவாக்கியுள்ளார்.

CHAMPIONS ICC TROPHY 2025 • PAKISTAN

இன்னும் 5 நாட்கள்

பெப்ரவரி 19 முதல் மார்ச் 09 வரை

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான
ஜூனியர் தமிழன்
பெப்ரவரி மாத சஞ்சிகைகள்
தற்போது விற்பனையில்...
பெப்ரவரி மாத சஞ்சிகைகளில் நேர அட்டவணையை மாணவர்கள் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.




பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
074 1684643 / 0777 983308

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7